பக்கங்கள் 28

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 07 ஞாயிற்றுக்கிழமை 20.04.2025 | அதிர்வு 258 |
|---|---|---|---|


## சிலாபம் கடற்கரையில் வயோதிபரின் சடலம்!

புத்தளம் – சிலாபம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடற்கரைப் பகுதியில் நேற்று சனிக்கிழமை வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் 03▶




### தியாகங்களால் கட்டமைக்கப்பட்ட

# விடுதலைத் தீயின் வீரியம் ஒருபோதும் ஓயவேமாட்டாது!

### அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் எம்.பி. சிறீதரன் தெரிவிப்பு

இன விடுதலை என்ற இறுதி இலக்கை அடையும் வரை தியாகங்களால் கட்டமைக்கப்பட்ட எங்கள் அறப் போரின் வீரியம் ஒருபோதும் ஓயாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில், மாவட்டக் கிளைப் பணிமனையில் நேற்று உணர்வெழுச்சியோடு நடைபெற்ற தியாகி அன்னை பூபதியின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் உரையாற்றும்போதே 04▶

### பெரிய அரச இயந்திரம், பாரிய படை கட்டமைப்பு இரண்டுக்கும் எதிராக

# தனித்து நிராயுதபாணியாக அஹிம்சைப் போர் தொடுத்த தியாகத் தாய் பூபதிக்கு தமிழ் மக்களின் வீரவணக்கங்கள்

### மட்டக்களப்பு நிகழ்வில் மலரஞ்சலி செலுத்தி சுமந்திரன் தெரிவிப்பு 02▶








நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் நாளை திங்கட்கிழமை எட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிரான மேலும் சில எழுத்தாணை மனுக்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நாளை எடுக்கப்படவிருக்கின்றன. அவை தொடர்பில் நீதிமன்றத்தின் முடிவு நாளை தெரிய வரக்கூடும்.

அதே சமயம் அரசியல் கட்சிகளின் நிர்வாகிகளைத் தேர்தல் ஆணையம் நாளை சந்திக்கின்றது. அப்போது உள்ளூராட்சித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதில் உள்ள சிக்கல்களை தேர்தல் ஆணையம் வெளிப்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களை ஏற்பது தொடர்பாக 05▶



### பெரிய அரச இயந்திரம், பாரிய படை கட்டமைப்பு இரண்டுக்கும் எதிராக

# தனித்து நிராயுதபாணியாக அஹிம்சைப் போர் தொடுத்த தியாகத் தாய் பூபதிக்கு தமிழ் மக்களின் வீரவணக்கங்கள்

## மட்டக்களப்பு நிகழ்வில் மலரஞ்சலி செலுத்தி சுமந்திரன் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

37 ஆண்டுகளிற்கு முன்பு தன்னிடம் இருந்த உயிரை எங்கள் இனத்திற்காக தியாகமாக ஈந்த அன்னைக்கு எங்களது வீர வணக்கங்களைச் செலுத்துகின்றோம்

என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அன்னை பூபதி அவர்களின் 37 ஆவது ஆண்டு நினைவு நாளான நேற்று அவரின் நினைவேந்தல் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான ஞா.சிறிநேசனின், மட்டக்களப்பு நகரில் லயன்ஸ் கிளப் வீதியில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது. அதில் பங்குகொண்டு உரையாற்றும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

37 ஆண்டுகளிற்கு முன்னர் பலவிதமான கோரிக்கைகளை முன் வைத்து - அந்த நாள்களிலே தமிழ் மக்களிற்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அட்டூழியங்களிற்கு எதிராகவும், தமிழ் மக்களிற்கான நிரந்தர ஓர் அரசியல் தீர்வைப் பெற வேண்டும் என்பதற்காகவும் உண்ணா நோன்பிருந்து மாய்ந்த அன்னை பூபதியின் நினைவுநாள் இன்றாகும்.

எத்தனை ஆண்டுகளானாலும் மக்கள் சார்பிலே இவ்வாறு செய்த இந்த அம்மாவின் தியாகத்தை நினைவுகூருவோம். இது எமது மனங்களில் அழியாத நினைவாக என்றும் இருக்கும். தமிழ் மக்களின் சரித்திரங்கள் எழுதும்போதும் இப்படியான உயிர்த் தியாகங்கள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும். ஒரு தாய், பெரிய அரச இயந்திரத்திற்கு எதிராக - பாரிய படைத் தளத்திற்கு எதிராக - துணிந்து தன்னந்தனியாக நிராயுதபாணியாக நின்று தனது மன வலிமையை மட்டும் வெளிப்படுத்தி மக்களிற்காக இந்தத் தியாகத்தைச் செய்திருக்கின்றார்.

37 வருடங்களிற்குப் பிறகும் பலர் நாங்கள் அங்கலாய்க்கலாம் எங்களிற்கான அரசியல் தீர்வு கிடைக்கவில்லையென்று. ஆனால் இப்படியான உரமேற்றுகின்ற பல சம்பவங்கள் கடந்து போகா. இவை எல்லாம் சிறப்பான பலனைத் தரும் என்று நம்புகின்றோம். தன்னிடம் இருந்த உயிரை தியாகமாக ஈந்த அன்னைக்கு எங்களது வீர வணக்கங்களைச் செலுத்துகின்றோம். - என்றார்.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் சிறிநாத், ஞா.சிறிநேசன், முன்னாள் மட்டக்களப்பு மேயர் தி.சரவணபவன், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.












# கருணா, பிள்ளையானின் வெளியேற்றமே விடுதலைப்புலிகளின் வீழ்ச்சிக்குக் காரணம்

## தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறவே பிள்ளையானை அநுர அரசு கைது செய்தது என்று புலம்புகின்றார் ராஜித

**"கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் வெளியேறியமையால் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு வீழ்ச்சியடைந்தது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக அநுர அரசு அரங்கேற்றியிருக்கும் நாடகமே பிள்ளையான் கைதாகும்."**

**- இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

**களுத்துறை பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,**



"வேலுப்பிள்ளை பிரபாகரன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போராட்டங்களுக்குத் தலைமை வகிக்கவில்லை. விஜேவீரவைப் போன்று அவரும் தலைமறைவாகவே இருந்தார். இந்நிலையில், போராட்டத்தை வழிநடத்திய ஒருவரே கருணா அம்மான். அவரது மிக முக்கிய சகாவாக பிள்ளையான் இருந்தார்.

ஆனையிறவு உட்பட 14 இராணுவ முகாம்களைச் சுமார் 4 நாட்களில் புலிகள் அழித்தனர். இந்த அனைத்து தாக்குதல்களையும் கருணா அம்மானே மேற்கொண்டார். கருணா அம்மானின் மாற்றத்தினாலேயே கிழக்கு மாகாணத்தை விடுதலைப் புலிகள் இழந்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் கருணா அம்மான் தொடர்ந்து இருந்திருந்தால் இராணுவத்தினரால் ஒருபோதும் தொப்பிகலவை கைப்பற்றியிருக்க முடியாது. இந்திய இராணுவம் கூட தொப்பிகலவுக்குச் செல்ல அஞ்சியது.

கருணா அம்மான் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே தொப்பிகலவையும் கைப்பற்ற முடிந்தது. கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் புலிகளிலிருந்து பிரிந்த பின்னரே என்றுமே கைப்பற்றப்ப முடியாது எனப் பிரபாகரன் சவால் விடுத்திருந்த தோரா போரா மலையைக் கூட கைப்பற்ற முடிந்தது.

அது மாத்திரமின்றி கிழக்கு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னரே விடுதலைப் புலிகளுக்கான ஆயுதப் பரிமாற்றமும் நிறுத்தப்பட்டது.

எதிர்காலத்தில் தாம் பாதுகாக்கப்படுவோம் என்று நம்பியே கருணாவும் பிள்ளையானும் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். அவ்வாறிருக்கையில் அரசு அவர்களைக் காட்டிக் கொடுத்தால் அது நியாயமற்றது.

இதன் ஊடாக வடக்கு புலம்பெயர் தமிழர்கள் ஊடாக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதே அரசின் நோக்கமாகும். கருணா மற்றும் பிள்ளையான் கைது செய்யப்படுவது புலம்பெயர் ஈழத்தமிழர்களை மகிழ்ச்சிப் படுத்துவதற்காகும்.

இதனை நோக்கமாகக் கொண்டே அரசு இந்த நாடகத்தை அரங்கேற்றியிருக்கின்றது. கருணா, பிள்ளையான் கொல்லப்படும் நாளே புலம்பெயர் ஈழத் தமிழர்கள் மிகவும் மகிழ்ச்சியடையும் நாளாகும். கலாநிதி என்.எம்.பெரேரா கூறியதைப் போன்று இன்று எதிரியின் எதிரி நண்பனாகியிருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் எதிரி கருணா அம்மான். கருணா அம்மானின் எதிரி புலம்பெயர் ஈழத்தமிழர்கள். புலம்பெயர் ஈழத்தமிழர்களின் நண்பன் ஜே.வி.பி. ஆகும். இது வரலாற்றுப் பேரழிவுக்கு வழிவகுக்கும்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**சிலாபம்...**

கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

5 அடி 4 அங்குலம் உயரமுடைய வயோதிபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

வயோதிபரின் சடலம் சிலாபம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## விடுதலைத் தீயின்...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "தியாகத் தாய் அன்னை பூபதியினதும், தியாக தீபம் திலீபனினதும் அஹிம்சைப் போராட்டங்களாலும், அதன்பின்னரான ஆயுதப் போராட்ட காலத்திலும் நிகழ்த்தப்பட்ட உயிர்த் தியாகங்களின் உந்துதலால் உருப்பெற்ற, விடுதலைக்கனலின் வீரியம் குறைந்து விட்டதாக, எமது மக்களின் விடுதலை தாகத்தை மலினப்படுத்துவோர் மார்தட்டிக் கொண்டாலும், இன விடுதலை என்ற இறுதி இலக்கை அடையும் வரை தியாகங்களால் கட்டமைக்கப்பட்ட எங்கள் அறப் போரின் வீரியம் ஒருபோதும் ஓயப் போவதில்லை." – என்றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நல்லூர் வட்டாரக் கிளைத் தலைவி குணலக்சுமி குலவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் அருள்செல்வி கனகராசா நினைவுச்சுடரை ஏற்றிவைத்தார். அகவணக்கம், மலர்மாலை அணிவித்தல், மலரஞ்சலி என்பவற்றைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன், போராளிகள் நலன் புரிச்சங்க உறுப்பினர் செல்வரட்ணம் தனுபன் ஆகியோர் நினைவுரைகளை ஆற்றினர்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளை உறுப்பினர்கள், வேட்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

















# காதலி வெட்டிக்கொலை! காதலன் தப்பியோட்டம்!!

களுத்துறை மத்துகம – தொலஹேன பகுதியில் இளம் பெண் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அங்கலவத்தை, மேர்வின் சமர நாயக்க மாவத்தை பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய பெண்ணே கொலை செய்யப்பட்டவர் ஆவார்.

காதல் உறவால் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம் பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாக இருக்கின்றார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் நாகொடை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.மத்துகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போதைப்பொருளுடன் 3 பெண்கள் கைது

ஆறு கோடி ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் 3 பெண்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் இருந்து 5 கிலோ கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பு, வெல்லம்பிட்டி மற்றும் மாளிகாவத்தை ஆகிய பகுதிகளை சேர்ந்த 25, 48 மற்றும் 50 வயதான மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவை உள்வாங்கி, அவற்றுக்கு ஏற்ப அந்தந்த உள்ளூராட்சி சபைகளுக்குரிய வாக்குச் சீட்டுகளை அச்சிடுவது போன்ற நெருக்கடிகள் காரணமாக, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான உள்ளூராட்சி சபைகளுக்குரிய தேர்தல்களை முன்னர் குறிப்பிட்ட மே 6ஆம் திகதியில் நடத்துவதில் சிக்கல்கள் இருப்பதை தேர்தல் ஆணையம் கட்சி பிரமுகர்களிடம் நாளை எடுத்துரைக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனால், அப்படி நெருக்கடிக்குரிய சபைகளின் தேர்தல்களை அடுத்த கட்டமாக பிறிதோர் தினத்தில் நடத்தும் திட்டத்தை தேர்தல் ஆணையம் நாளை வெளியிடக் கூடும்.

தேர்தல்களைக் கட்டம் கட்டமாக நடத்தினால், முதல் கட்டத்தில் நடத்தப்படும் தேர்தல்களின் முடிவுகள் அடுத்த கட்ட தேர்தல்களின் வாக்களிப்பில் அரசியல் ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும் என்ற கருத்தை தேர்தல் ஆணையக் கூட்டத்தில் முன்வைப்பதற்கு பல கட்சிகளும் தயாராக இருக்கின்றன என்றும் தெரிய வருகின்றது.

இந்தக் காரணத்துக்காக எல்லா தேர்தல்களையும் ஒரேடியாக நடத்தக் கூடியதாக ஒன்றாகப் பிற்போடும்படி பல கட்சிகளினதும் பிரதிநிதிகள் நாளை தேர்தல் ஆணையத்தை நேரில் கோரக் கூடும் என்றும் தெரிகிறது.

அப்படி தேர்தல்களைத் தள்ளிப் போடுவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு இருக்கின்றதா என்ற சட்டக் கேள்வியும் எழாமல் இல்லை. ஆயினும் 2023 அறிவிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தல் இதே போன்று பல தடவைகள் ஒத்தி வைக்கப்பட்ட பின்னரே, நிரந்தரமாக நடைபெறாமல் தள்ளிப் போயிற்று என்ற விடயமும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் நாளை தேர்தல் ஆணையத்திடமிருந்து திட்டவட்டமான செய்தி அல்லது சமிக்ஞை வெளிவரக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முழுமூச்சான தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்து வருவதாகக் களத்தகவல்கள் தெரிவிக்கின்றன. நேற்று அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு, நாவிதன்வெளி போன்ற இடங்களில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டத்தின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சணக்கியன், சிறிநேசன், மருத்துவர் சிறிநாத் ஆகியோரும், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசனும், கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனும் என ஆறு பிரமுகர்களும் ஒன்றாகப் பங்குபற்றியமை அப்பகுதியில் பெரும் வரவேற்பைப் பெற்றதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று அம்பாறை மாவட்டம் பொத்துவிலிலும், திருக்கோவிலிலும் இது போன்ற கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன.

அடுத்து வரும் தினங்களில் திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, முல்லைதீவிலும் இதே போன்று தமிழரசு பிரமுகர்கள் கூட்டாகக் களம் இறங்கிப் பிரச்சாரம் செய்யும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடைசி நேரத்தில் தமிழரசுக் கட்சியின் பிரசாரம் மும்முரம் அடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# டயஸ்போராக்களைத் திருப்திப்படுத்த பிள்ளையானைத் தாண்டிக்கூடாது!

## இப்படிக் கூறுகின்றார் நாமல் எம்.பி.

“பிள்ளையான் தவறிழைத்திருந்தால் தண்டனை வழங்கலாம். ஆனால், டயஸ்போராக்களைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்யாத தவறுக்காக அவரைத் தண்டிக்க முற்பட்டால், அதற்கு எதிராக நாம் போராடுவோம்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“பிள்ளையான் கைது செய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸார் ஒரு காரணத்தையும், பொலிஸ் அமைச்சர் வேறொரு காரணத்தையும் கூறுகின்றனர்.

டயஸ்போராக்களின் தேவைக்கேற்ப கருணா அம்மானுக்கு எதிராக பிரிட்டனில் தடை விதிக்கப்பட்டது. புலிகள் அமைப்பைத் தோற்கடிப்பதற்கு இராணுவத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியதாலேயே அவருக்கு இப்படி நடந்துள்ளது.

அதேபோல் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி, ஜனநாயக வழிக்கு வந்து புலிகளைத் தோற்கடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பிள்ளையானையும் கைது செய்துள்ளனர். வேறு நபர்களின் தேவைக்கேற்பவே பிள்ளையான் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது.



பிள்ளையான் செய்த சேவை தொடர்பில் உதய கம்மன்பிலவுக்குத் தெரியும். கம்மன்பில எமது அணியில் இருந்தவர். எனவே, அவருக்காக கம்மன்பில முன்னிலையானது சரியான முடிவே.” – என்றார்.




# மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் சாவு!

மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நிட்டம்புவை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி அருகிலிருந்த தொலைபேசி கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள் படுகாயமடைந்த நிலையில் வத்துப்பிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் நிட்டம்புவை – ருக்கஹவில பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஆவார்.

இவர் கடமைகளை முடித்துவிட்டு மீண்டும் வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிட்டம்புவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தந்தையை இரும்புக் கம்பியால் தாக்கிக் கொலை செய்த மகன்!

## கொழும்பில் கொடூரம்

கொழும்பு – கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒருகொடவத்தை பிரதேசத்தில் மகனால் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டு தந்தை கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

ஒருகொடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய தந்தையே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

சம்பவ தினத்தன்று தந்தைக்கும் மகனுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின்போது சந்தேகநபரான மகன் தனது தந்தையில் தலையில் இரும்புக் கம்பியால் தாக்கியுள்ளார்.

படுகாயமடைந்த தந்தை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபரான 20 வயதுடைய மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# முழு நாட்டையும் தற்போதைய அரசாங்கம் ஏமாற்றுகின்றது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

வளமான நாட்டையும், அழகான வாழ்க்கையையும் உருவாக்குவோம் என வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அந்த வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் – பேமடுவ பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



“இன்று பலர் இந்த அரசாங்கத்தை பொய் கூறும் அரசாங்கம் என்றும், ஏமாற்று அரசாங்கம் என்றும், கேவலமான அரசியலில் ஈடுபடும் அரசாங்கம் என்றும் கூறுகின்றனர். 24 மணி நேரமும் பொய் மற்றும் ஏமாற்று வித்தைகள் மூலம் மக்களை திசைதிருப்பி இந்த அரசாங்கம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.

அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் அதிகரித்து, நாட்டு மக்களின் உப்புத் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத அரசாங்கமாகக் காணப்படுகிறது.

எரிபொருள் சலுகை வழங்குவதாகக் கூறினாலும் இதுவரை இவர்களால் வழங்க முடியாது போயுள்ளது. மின்சார கட்டணத்தைக் கூட இவர்களால் முறையாகக் குறைக்க முடியாது போயுள்ளது.

உர மானியம் வழங்கப்படவில்லை. எதிர்காலத்தில் உரங்களின் விலைகள் அதிகரிக்கும்.

யானை மனித மோதலினால் பாரிய சேதம் ஏற்படுவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை.

இது விவசாய சமூகத்தையும் முழு நாட்டையும் ஏமாற்றும் நடவடிக்கையாகும். இந்த பிரச்சினைகள் எதற்கும் அரசாங்கத்திடம் பதில் இல்லை.“”– என்றார்.



# ஏற்றுமதி பயிர்களின் உற்பத்தியில் வீழ்ச்சி

நாட்டின் பிரதான ஏற்றுமதி பயிர்களான தேயிலை, தென்னை மற்றும் இறப்பர் ஆகியவற்றின் உற்பத்தி இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வறட்சியான காலநிலை காரணமாகக் கடந்த பெப்ரவரி மாதத்தில் தேயிலை உற்பத்தியானது 15.6 மில்லியன் கிலோ கிராமாக வீழ்ச்சியடைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த வருடம் பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் இறப்பர் உற்பத்தி 5.3 மில்லியன் கிலோகிராமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேநேரம் இந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் 178.1 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததாகவும் இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் கணிசமான அளவு வீழ்ச்சியாகும் எனவும் இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உயிர்த்தெழுவோம்!

இன்று உலகளாவிய ரீதியில் நமது கிறிஸ்தவ சகோதரர்கள் கொண்டாடும் உயிர்த்த ஞாயிறு தினம்.

ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா அல்லது பாஸ்கா என்பது இதன் பெயர்.

இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் சாவில் இருந்து உயிர்த்தமையைக் குறிக்கும் விதமாக கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படும் ஒரு திருநாள் இது.

ஒவ்வொரு ஆண்டும் நாற்பது நாள்கள் தவக்காலத்தின் முடிவில் இது வருகிறது. இந்நாள் புனித வெள்ளியில் இருந்து மூன்றாம் நாளான ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படுகிறது.

இயேசுவின் உயிர்ப்பு மனுக்குலத்துக்கு ஒரு நம்பிக்கையை வழங்கியுள்ளது. இயேசுவின் உயிர்ப்பு நமக்கு ஆறுதலின் செய்தியைத் தருகிறது. அதாவது நமது பாடுகளின் பின்னால் நமக்கும் உயிர்ப்பு, வெற்றி உண்டு என்பதே அச்செய்தி.

இயேசுவின் பாடுகள் மரணத்தோடு அவருடைய வாழ்வு முற்றுப் பெறவில்லை என்பதை உணர்த்துவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இயேசுவின் சீடர்கள் கூட ஆரம்பத்தில் அப்படித்தான் நினைத்தார்கள். நம்பிக்கை இழந்து நின்றார்கள். ஆனால் இயேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். வெற்றிவாகை சூடினார்.

நம்முடைய வாழ்வும் பாடுகள் நிறைந்த வாழ்வுதான். துன்பங்கள், போராட்டங்கள் நிறைந்த வாழ்வுதான். ஆனாலும் நாம் நம்பிக்கை இழக்கக்கூடாது, வாழ்க்கையில் விரக்தி அடையக்கூடாது. காரணம் இயேசு தனது துன்பத்தை, சிலுவைப் பாடுகளைக் கடந்து உயிர்ப்பின் வெற்றியை அடைந்தது போல - விண்ணேற்றமடைந்து மகிமை பெற்றமை போல - நாமும் வெற்றியை, மகிமையைப் பெறுவோம் என நம்புவதற்கு இயேசுவின் உயிர்ப்பு நமக்கு உறுதிப்பாட்டை தருகிறது. அதனால் இந்தப் பெருநாள் மதம் கடந்து மனிதத்துவத்துக்கு நம்பிக்கையூட்டும் திருநாளாக நம் முன் மிளிர்கின்றது.

இலங்கை தீவிலே ஈழத் தமிழர்களாகிய நாங்கள் கடந்த ஏழரை தகாப்தங்களாக சொல்லொணாத் துயர்களை - பாடுகளை - சுமந்தவர்களாக பேரழிவுகளைச் சந்தித்து நிற்கின்றோம்.

எங்கள் அபிலாஷைகள் - வேணவாக்கள் - எதிர்பார்ப்புகள் - நம்பிக்கைகள் - தகர்ந்து போய்விட்டன என்று வேதனையோடு துவண்டு கிடக்கின்றோம்.

நாம் அப்படி துவளத் தேவையில்லை, பாடுகளின் பின்னால் மீட்சி உண்டு, விடிவு கிட்டும், நாம் மீண்டெழுவோம் என்ற நம்பிக்கையை நமக்கு வாழ்ந்து காட்டி, உயிர்த்தெழுந்து, உறுதிப்படுத்தி இருக்கிறார் இயேசுபிரான் என்ற செய்தியை இன்றைய உயிர்த்த ஞாயிறு தினம் நமக்கு உணர்த்தி நிற்கின்றது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் இதே உயிர்த்த ஞாயிறு தினத்தில் எங்கள் இலங்கை தீவு மேலும் மோசமான அழிவுகளைச் சந்தித்தது. அவற்றுடன் கூட எங்கள் வாழ்வு மரித்து போய்விடவில்லை. இயேசு பிரான் மீண்டெழுந்தமை போல நமது நாட்டின் வாழ்வியலும் மீண்டெழும் என்ற நம்பிக்கை தளராமல், நாம் தொடர்ந்து பாடுகளை எதிர்கொண்டு சுமந்தபடி மீண்டெழப் போராட வேண்டும். அதற்கான இறை நம்பிக்கையையும் மனத்தைரியத்தையும் இன்றைய உயிர்த்த ஞாயிறு தினம் நமக்கும், நமது நாட்டு மக்களுக்கும் தந்து நிற்கட்டும்.

# இலங்கையின் நலிவடைந்த நிதிநிலைமை அமெரிக்கத் தீர்வையால் மேலும் பாதிப்பு

## பிட்ச் ரேட்டிங்ஸ் நிறுவனம் எதிர்வுகூறல்




நலிவடைந்த நிலையில் இருக்கும் இலங்கையின் நிதிநிலைமை, அமெரிக்காவின் தற்போதைய வர்த்தக அழுத்தங்களால் மேலும் பாதிப்படையக்கூடும் என சர்வதேச கடன்தரப்படுத்தல் நிறுவனமான ‘பிட்ச் ரேட்டிங்ஸ்’ எச்சரித்துள்ளது.

இலங்கையின் நிதியியல் நிலையானது தம்மால் ‘சிசிசி1O’ ஆகத் தரப்படுத்தப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள பிட்ச் ரேட்டிங்ஸ் நிறுவனம், இது அமெரிக்காவினால் விதிக்கப்படும் உயர் வரி அறவீட்டினால் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படும் பட்சத்தில், இலகுவில் எதிர்மறைத் தாக்கத்துக்கு உள்ளாகக்கூடிய நிலையில் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

‘அமெரிக்காவின் உயர் வரி அறவீடானது ஆசிய, பசுபிக் பிராந்தியத்திலுள்ள இறையாண்மையுடைய பெரும்பாலான நாடுகளின் கடன் அளவீடுகளில் வலுவான அழுத்தத்தை ஏற்படுத்தும். ஆசிய, பசுபிக் பிராந்திய நாடுகள் அமெரிக்காவின் நிபந்தனைகளை சார்ந்திருப்பது இந்த வர்த்தக யுத்தத்தினால் அவை மேலும் நலிவடைவதற்கு வழிகோலும்’ எனவும் பிட்ச் ரேட்டிங்ஸ் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதுமாத்திரமன்றி இந்த உயர் வரி அறவீட்டினால் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சார்ந்த முதலீடுகள் தாக்கத்தை எதிர்கொள்ளும் என்பதால், ஆசிய பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சி சற்று மந்தமடையும் என அந்நிறுவனம் எதிர்வுகூறியுள்ளது.

குறிப்பாக சீனா, வியட்நாம், தாய்வான், தாய்லாந்து மற்றும் கொரியா என்பன உள்ளடங்கலாக இப்பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான நாடுகள் ஏற்றுமதிகள் மற்றும் முதலீடுகளுக்காக அவற்றின் மிகமுக்கிய ஏற்றுமதிச்சந்தையான அமெரிக்காவில் தங்கியிருப்பதாகவும், ஆகவே அந்நாடுகள் குறிப்பிடத்தக்களவு சவால்களுக்கு முகங்கொடுக்கநேரும் எனவும் ஃபிட்ச் ரேட்டிங்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.



# எச்சரிக்கை மட்டத்திற்கு உயரும் வெப்ப நிலை

நாட்டின் பல பகுதிகளில் மனித உடலால் உணரக்கூடிய வெப்பநிலை இன்று எச்சரிக்கை மட்டத்திற்கு உயரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் வெப்பமான வானிலை நிலவக்கூடும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சப்ரகமுவ, ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், பொலன்னறுவை, அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் நாளை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# பாதுகாப்புப் படையினர் நடாத்தும் சித்திரைப் புத்தாண்டு சூரியத் திருவிழா

(பா.சதீசன்)

சித்திரைப் புத்தாண்டினை சிறப்பிக்கும் முகமாக இலங்கைப் பாதுகாப்பு படைப்பிரிவின் 59 ஆவது காலாற்படையணியின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று கரைதுறைப்பற்று பிரதேசசபை மைதானத்தில் சிறப்பான முறையில் ஆரம்பமாகி நடைபெற்றிருந்தது.

ஆரம்ப விளையாட்டு நிகழ்வான மரதன் ஓட்டம், துவிச்சக்கர வண்டி ஓட்டம், (ஆண், பெண்) போன்ற விளையாட்டினை முல்லைத்தீவு மாவட்ட 59ஆவது காலாட்படைப் பிரிவின் தளபதி மேஜர்ஜென்ரல் நளின் ஹெட்டியாராட்சி அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து மைதான விளையாட்டுக்களான வழுக்குமரம் ஏறுதல், தலையணைச் சண்டை, முட்டி உடைத்தல், யானைக்கு கண் வைத்தல், தேங்காய் துருவுதல், கிடுகு இழைத்தல் முதலான பல பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெற்றிருந்தது.

இந்த விழாவில் பிரதம அதிதியாக வன்னி மாவட்ட படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் பிரதீப் குலதூங்க கலந்து சிறப்பித்ததுடன் போட்டிகளில் வெற்றிபெற்ற வீர வீராங்கனைகளுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார். அத்தோடு முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் அவர்களும் கலந்து சிறப்பித்துடன் இராணுவத்தினர்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்த விளையாட்டு விழாவின் இரவு நிகழ்வாக "அக்னி" இசைக்குழுவின் இன்னிசை நிகழ்வு இடம்பெற்றது.













## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# மட்டக்களப்பு ஆயித்தியமலையில் அன்னை பூபதிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நினைவேந்தல்



(கனகராசா சரவணன்)

தியாக தீபம் அன்னை பூபதியின் 37ஆவது நினைவேந்தலை தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பு ஆயித்தியமலை பிரதேசத்தில் அன்னையின் திருவுருவ படத்திற்கு சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி உணர்வு பூர்வமாக முன்னெடுத்தது

தமிழ் தேசிய மக்கள் முன்னணி வவுணதீவு பிரதேச சபை வேட்பாளர் செல்வகுமார் தலைமையில் ஆயித்தியமலை பிரதேசத்திலுள்ள பிரத்தியோகமான இடத்தில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில் கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், மாவட்ட அமைப்பாளர் குகநாதன், வெல்லாவெளிப் பிரதேச அமைப்பாளர் குமாரசிங்கம் மற்றும் வவுணதீவு பிரதேச சபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது அன்னை பூபதியின் திருவுருவ படத்திற்கு மலர்மாலை அணிவித்து, சுடர் ஏற்றி, மலர் தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.





# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்









# வீட்டுச் சின்னத்துக்கு நாம் அனைவரும் வாக்களித்து தமிழர் தேசியத்தின் உறுதியை நிலைநாட்டுவோம்!

## தமிழரசு மானிப்பாய்த் தொகுதித் தலைவர் பிரகாஷ் அழைப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்துக்கு வாக்களிப்பதன் ஊடாக எங்களுடைய தேசியம், சுயநிர்ணயம், சுய ஆட்சி என்பன இன்றுவரை எங்கள் மக்கள் மத்தியிலே இருந்து அகலவில்லை, இலங்கையின் தேசியக் கட்சிகளுக்கு – சிங்கள கட்சிகளுக்கு – தமிழர் தாயகப் பிரதேசத்தில் இடமில்லை என்ற செய்தி எதிர்வரும் 06 ஆம் திகதி சொல்லப்படும். எங்களுடைய பிரதேச மக்களும் பெருவாரியாக ஒவ்வொரு வட்டாரத்திலும் உங்களுடைய தமிழரசுக் கட்சியைச் சார்ந்த பிரதிநிதிகளை – வேட்பாளர்களை – வெல்ல வைக்க வேண்டும் என்று இந்த இடத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வலிகாமம் தெற்குப் பிரதேச சபைக்கான தேர்தல் அலுவலகம் நேற்று மாலை யாழ். உடுவில் பகுதியில் திறந்து வைத்து உரையாற்றும் போதே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய்த் தொகுதித் தலைவர் தியாகராஜா பிரகாஷ் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் மானிப்பாய் தொகுதி தலைவர் தியாகராஜா பிரகாஷ் இலங்கை தமிழரசு கட்சியின் சார்பில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





# வவுனியாவில் பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் அன்னை பூபதியை அஞ்சலித்து நேற்று நிகழ்வு

### பின் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் மாநகரசபை தேர்தல் பரப்புரை ஆரம்பம்

(கி.வசந்தன்)

வவுனியா மாநகரசபை முன்றலில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் அன்னை பூபவதி அவர்களுக்கு அஞ்சலி செலுத்திவிட்டு மாநகரசபைக் கான தேர்தல் பரப்புரையை தமிழ் தேசிய மக்கள் முன்னனி நேற்றுக் காலை ஆரம்பித்தது.

அன்னை பூபதி அவர்களின் 37 ஆவது ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு தமிழ் தேசிய மக்கள் முனன்ன யின வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ்.தவபாலன் தலைமையில் பொங்கு தமிழ் நினைவுத்தூபி முன்றிலில் இடம் பெற்றது. இதன்போது அன்னை பூபதி யின் திருவுருப்படத்திற்கு தீபம் ஏற்றியும், மலர் தூபியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது, வவுனியா மாநகரசபை யில் போட்டியிடும் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் வேட்பாளர்கள், ஆதரவா ளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தொடந்து வேட்பாளர்கள் தமது துண்டு பிரசுரங்களை வழங்கி வவுனியா நகரில் பிரச்சார நடவடிக்கைகளை ஆரம்பித் தனர்.






















# வவுனியாவில் பிரதமரின் வருகையை முன்னிட்டு பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை

(கி.வசந்தன்)

வவுனியாவிறகு பிரதமர் இன்று வருகை தரவுள்ள நிலையில் பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கைளை மேற்கொண்டனர்.

பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய இன்று மாலை 5 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து உக்குளாங்குளம் சீர்திருத்த விளையாட்டு மைதானத்தில் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளார்.

இந்நிலையில், நேற்று அந்தப் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கையில் சுகாதார பரிசோதகர்கள், சிவில் பாதுகாப்பு குழுவினர், சீர்திருத்த விளையாட்டுக் கழகத்தினர் ஆகியோரின் பங்களிப்புடன் ஈடுபட்டனர். அப் பகுகளில் நீர் தேங்கி நிற்கும் வகையில் காணப்பட்ட பொருள்கள், குப்பை கூழங்கள் என்பன அகற்றப்பட்டன. பிரதேச சபை வாகனங்களின் உதவியுடன் அவை அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

மேலும், நீர் தேங்கா வண்ணம் வீட்டுச் சூழலையும், அயல் சூழலையும் பாதுகாக்குமாறும் அப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கி வைக்கப்பட்டன.











# அநுர அலைக்குள் மீண்டும் கரைதல் தமிழர்களின் அரசியலின் சாபக்கேடு!



புருஜோத்தமன் தங்கமயில்

தையிட்டியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை தொடர்பிலான பிரச்சினைகளுக்கு தமிழ் அரசியல் கட்சிகள் தலையீடுகளைச் செய்யாது விட்டால், விரைவில் தீர்வு காணப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்திருக்கிறார். யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

“சுனாமி” ஆழிப்பேரலை அனர்த்தம் தொடங்கி நாட்டில் நடைபெறும் தற்செயலான நிகழ்வுகள் ஈறாக அனைத்து விடயங்களிலும் மக்கள் விடுதலை முன்னணி, கட்சி நலன்சார் அரசியலே செய்து வந்திருக்கின்றது. சமாதான முன்னெடுப்புக்களைக் குழப்பி, தென் இலங்கை பூராவும் இனவாதத்தீயை கொழுந்து விட்டு எரிய வைத்து, அந்தச் சூட்டில் ராஜபக்ஷக்களை ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்கள் அநுரவும் அவரது தோழர்களும். இறுதிப் போருக்கு வித்திட்டதிலும் அவர்களின் பங்கு கணிசமானது. அப்படிப்பட்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்ற அநுரவும் அவரது தோழர்களும் அமைத்துள்ள அரசாங்கம் இன்று தமிழ் மக்களிடம் வந்து, தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்து விடயங்களிலும் அரசியல் செய்வதாக கூறுகின்றார்கள். காலம் விசித்திரமானதுதான். ஆனால், எந்த முகமூடியை அணிந்து கொண்டாலும் மக்கள் விடுதலை முன்னணியின் கடந்த கால வரல–றுகளைக் கடந்துவிட்டு அரசியல் உரையாடல்களைச் செய்துவிடலாம் என்று நினைப்பது அபத்தமானது. “தேசிய மக்கள் சக்தி“ என்பது, மக்கள் விடுதலை முன்னணி அணிந்திருக்கும் முகமூடி மாத்திரமல்ல. அது, மேற்கு நாடுகளுக்கு இணக்கம் காட்டுவதற்காக பின்னப்பட்ட கோணலான கொள்கைப் பிறழ்தலின் எச்ச வடிவமும் கூட.

ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்கிற சில இராஜதந்திர நகர்வுகள் மற்றும் நாட்டு மக்களின் பசிக் கோபத்தினால் எழுந்த “அரகலய“ பிரசவித்ததுதான் இன்றைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். அநுரவும் அவரது தோழர்களும் ஆட்சி மாற்றத்துக்காக உழைத்தார்களா என்றால், ‘ஆம்’ அவர்கள் குறிப்பிட்டளவு உழைத்தார்கள்தான். ஆனால், அவர்களின் உழைப்பு என்பது ஆட்சி அமைக்கப் போதுமான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, அரகலயவும், அதன் உணர்வலைகளுமே தேசிய மக்கள் சக்தியை ஆட்சியில் அமர்த்தியது. அதனைவிட்டுவிட்டு, தென் இலங்கையின் பாரம்பரிய கட்சிகள் போல, தேசிய மக்கள் சக்தியும், புரட்சி மாற்றம் பேசும் இளைய சகோதரர்களும் நடந்து கொள்ளும் போது, அவற்றைக் கவனிக்காது கடந்துவிட முடியாது.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையொன்று தொடர்பில் சரியாக தீர்வு காண்பது என்பது, அந்த விகாரையை முழுவதுமாக அகற்றி, காணிகளை உரிமையாளர்களிடம் கையளிப்பதுதான். அதற்கு மாற்றாக அந்த விடயத்தை எவ்வாறு கையாண்டாலும், அதில் தீர்வு என்ற ஒன்று எப்போதுமே இருக்காது. அது, வழுவிய நீதியாகவே பதிவு பெறும். அரசியல் மேடைகளையும், உரைகளையும் கவர்ச்சிகரமாக மாற்றுவதற்கு ‘புரட்சி மாற்றம்’ பற்றிய விடயங்களைக் எடுத்துக் கையாள்வது இலகுவானது. ஆனால், மக்களின் நிலைப்பாடுகளில் நின்று, புரட்சி மாற்றத்தினை செயற்படுவதற்கு அரசியல் தற்துணிவு வேண்டும். அதனை, அநுர அரசாங்கம் இதுவரை வெளிப்படுத்தவில்லை. மாறாக, தையிட்டி சட்ட விரோத விகாரை விடயத்தில் தமிழ்க் கட்சிகள் அரசியல் தலையீடுகளைச் செய்யக் கூடாது என்று கோருவது அரசியல் அறிவிலித்தனம் இல்லையா? ஏனெனில், கட்சிகளின் அடிப்படையே மக்களின் பிரச்சினைகள், அதற்கான தீர்வு தொடர்பில் பேசுவதுதான். அதுதான் அரசியலே. அதனை கைவிட்டுவிட்டு, ஒதுங்கிக் கொள்ள வேண்டும் என்று அநுர கோருவதும், அதனை அவரின் தோழர்கள் நாளும் பொழுதும் தூக்கிச் சுமப்பதையும் எப்படி நோக்குவது? தையிட்டி சட்டவிரோத விகாரை விடயத்தில் தமிழ் கட்சிகள் தலையிட்டால், அதனை வைத்து தென் இலங்கையிலும் இனவாதம் பரப்பப்படும் என்று அநுர பேசுகிறார் என்றால், அவர் சின்னச் சின்ன சலசலப்புக்களுக்கு எல்லாமும் பயந்த, எந்த முடிவும் எடுப்பதற்கு தைரியம் இல்லாத ஆட்சியாளர்களின் தொடர்ச்சியாக தன்னையும் முன்னிறுத்த முனைகின்றார்.

மக்களின் சொந்தக் காணிகளில் அத்துமீறி ஆக்கிரமிப்பின் வடிவமாக கட்டப்பட்டுள்ள விகாரையை அகற்றுவது என்பது அடிப்படையானது. அதில், யாருக்கு என்ன மாற்றுக் கருத்து இருக்க முடியும். ஆட்சி அதிகாரம் – இராணுவ மேலாதிக்கம் இருக்கின்றது என்பதற்கான தனியார் காணிகளை அபகரித்து ஆக்கிரமிப்பின் வடிவங்களாக மத – மார்க்க நிறுவனங்களையோ, கட்டடங்களையோ அமைத்து விடலாம் என்பது, சர்வாதிகாரத்தின் கூறு இல்லையா? அது தொடர்பில், அநுரவின் இளைய சகோதரர்களாக வடக்குக் கிழக்கில் இணைந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் பிரதிநிதிகள் கேள்வி எழுப்ப மாட்டார்களா? கடந்த காலத்தில் ராஜபக்ஷக்களின் ஏவல் தரப்புக்களாக செயற்பட்ட ஈ.பி.டிபி., பிள்ளையான் குழு, கருணா குழு, அங்கஜன் போன்றோருக்கும், இந்த மக்கள் பிரதிநிதிகளுக்கும் என்ன வித்தியாசம்? மக்கள், மாற்றத்தைக் கோரித்தான் உங்களை தேர்ந்தெடுத்துள்ளதாக நீங்கள் மேடைகளில் முழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். அந்த மாற்றம் என்பது,

தொடர்ச்சி▼



# அநுர அலைக்குள் மீண்டும் கரைதல் தமிழர்களின் அரசியலின் சாபக்கேடு!

தொடர்ச்சி▲

மக்களின் அடிப்படை விடயங்களை மறந்து நின்று செயற்படுவதற்காகவா? இந்தக் கேள்விகளை தேசிய மக்கள் சக்தியின் வடக்குக் கிழக்குப் பிரதிநிதிகளை நோக்கி எழுப்பினால், அவர்கள் சமூக ஊடகங்களில் 'தடை' செய்கிறார்கள். அல்லது ஒளித்து ஓடுகிறார்கள். அரசியல் தீர்வு விடயத்தில்தான், தேசிய மக்கள் சக்தியின் தமிழ் பிரதிநிதிகளுக்கு எந்தவித புரிதலும் இல்லை என்று எடுத்துக் கொண்டாலும், தையிட்டி சட்டவிரோத விகாரை போன்ற விடயங்களிலும் குரல் எழுப்புவதற்குக்கூட கட்சித் தலைமையினால் தடைவிதிக்கப்பட்டிருக்கின்றது என்பது மிகப்பெரிய சோகம். ஏனெனில், மௌனிகள் அரசியலுக்கு பெரும் சாபக்கேடாகும். அப்படியான நிலையினை, தேசிய மக்கள் சக்தியின் தமிழ்ப் பிரதிநிதிகள் பிரதிபலிக்கிறார்கள். வடக்குக் கிழக்கில் மாத்திரமல்ல, மலையக பிரதிநிதிகளின் நிலையும் அப்படித்தான் இருக்கின்றது. தேசிய மக்கள் சக்தியின் தமிழ்ப் பிரதிநிதிகளின் தேர்தல் பிரச்சார உரைகள் மற்றும் நாடாளுமன்ற பேச்சுக்களைக் கேட்கும்போது, ராஜபக்ஷ துதிபாடிகள் கடந்த காலத்தில் எப்படி நடந்து கொண்டார்களோ அதனையே, இவர்களும் பிரதிபலிக்கிறார்கள். இவர்களுக்கு என்ற தனித்த அரசியல் தெளிவு என்று எதுவும் கிடையாது. தேசிய மக்கள் சக்தியின் தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் கடந்த காலங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் அரசியல் சார்ந்த தெளிவோடு இயங்கியவர்கள் அல்லர். மாறாக, அரகலய பிரசவித்த புரட்சி மாற்றக் கோசத்திலும் அதனால் எழுந்த அநுர அலையினாலும் உள்வாங்கப்பட்டவர்கள். இவர்களுக்கு தனி அடையாளம் – அரசியல் என்ற ஒன்று எப்போதுமே இருந்தது இல்லை. சிலர், தமிழ் கட்சிகளில் சில ஆளுமைகளுக்குப் பின்னால் துதிபாடிகளாக மாத்திரம் கடந்த காலத்தில் செயற்பட்ட வரலாற்றைக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் அரசியல் தற்துணிவு, தெளிவு பற்றி எதிர்பார்ப்பது அபத்தமானதுதான். ஆனால், அந்த அபத்தத்தை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் அனுமதிக்க முடியாது. ஏனெனில், கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான குறைந்த பட்ச அரசியல் தற்துணிவும் அதுசார் முடிவெடுக்கும் திறனும் இல்லாமல், மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்துக்குள் எல்லாவற்றுக்குமாக இவர்கள் காத்திருப்பார்கள்.

மன்னாரில் அண்மையில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அநுர, தேசிய மக்கள் சக்தியிடம் உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிப் பொறுப்பைத் தந்தால், அவற்றின் தேவைகளை உடனடியாக தீர்த்து வைப்போம். மாறாக, மாற்றுக் கட்சிகளிடம் ஆட்சியை வழங்கினால், அந்தச் சபைகளுக்கான நிதிப் பங்கீடு உள்ளிட்ட விடயங்களை ஒன்றுக்கு பத்துத் தடவைகள் ஆராய்ந்துதான் விடுவிப்போம் என்றிருக்கிறார். கடந்த காலத்தில் ராஜபக்ஷக்களும், ரணிலும் செய்த அதே அதிகார துஷ்பிரயோகத்தை தேர்தல் பிரச்சாரக் காலத்தில் அநுரவும் கையில் எடுத்திருப்பதற்கு மேற்கண்ட உரையை உதாரணமாகக் காட்டலாம். மக்களினால் தேர்தெடுக்கப்பட்ட சபைகளை, அதற்கான ஒக்கீடுகளை பொதுவான நிலைப்பாடுகளில் நின்று அணுகுவதுதான் சரியானது. ஆனால், தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் சபைகளுக்கு உடனடியாக நிதிப் பங்கீடுகளைச் செய்வோம் என்பதும், மற்றக் கட்சிகள் ஆட்சி அமைக்கும் சபைகளுக்கு நிதி ஒத்துகீடுகளை பலமுறை ஆராய்ந்துதான் விடுவிப்போம் என்பது ஜனநாயக அரசியலில் நம்பிக்கை கொண்ட எவராலும் முன்வைக்க முடியாத கருத்து. இந்தக் கருத்துக்கள் எல்லாமும், சுனாமி பேரழிவு காலத்திலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப்படுவதை நீதிமன்றம் வரை சென்ற தடுத்து, இரக்கமற்ற அரசியல் செய்த மக்கள் விடுதலை முன்னணியின், முன்னணிப் பேச்சாளராக – செயற்பாட்டாளராக – சந்திரிக்கா அமைச்சரவை அமைச்சராக அநுர செயற்பட்ட காலங்களை மீண்டும் கண்முன் கொண்டு வருகின்றன. அந்தக் காலம், ராஜபக்ஷக்களுக்கோ, ரணிலுக்கோ எந்தவிதத்திலும் சளைத்தது இல்லை. அது, தமிழ் மக்களைப் பொறுத்தளவில் கொடூரமானது. தேசிய மக்கள் சக்தி என்ற முகமூடிக்குள் இருந்து அநுரவும் அவரது தோழர்களும் மக்கள் விடுதலை முன்னணியின் கொடூர முகங்களைக் காட்டுகிறார்கள். அது வடக்குக் கிழக்கு மக்களின் அரசியல் – அதிகார நலன்களில் என்றைக்கும் அக்கறை கொண்டிருந்தது இல்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் முன்னால், தமிழ்த் தேசியக் கட்சிகளா தேசிய மக்கள் சக்தியா என்ற விடயம் எழுந்திருக்கின்றது. தமிழ்த் தேசியக் கட்சிகளின் செயற்பாடுகளில் விமர்சனங்கள் உண்டு. கடந்த காலத்தில் அவர்கள் தங்களுக்கு முட்டி மோதி, தமிழர் அரசியலை நடுவீதியில் விட்டிருக்கிறார்கள் என்ற தமிழ் மக்களின் கோபம் நியாயமானது. ஆனால், அந்தக் கோபம் தென் இலங்கையின் இனவாத சக்திகளை வடக்குக் கிழக்கில் வளர்த்துவிடுவதற்கு உதவக் கூடாது. நியாயமான கோபம் என்பது, தமிழ்க் கட்சிகளை திருத்தி நல்வழிப்படுத்தும் அளவுக்கானதாக இருக்க வேண்டும். மாறாக, அடுப்புக்குள் விழுந்து வெந்து சாவதாக

தொடர்ச்சி▼



# அநுர அலைக்குள் மீண்டும் கரைதல் தமிழர்களின் அரசியலின் சாபக்கேடு!

தொடர்ச்சி▲

இருக்கக் கூடாது. இன்றைக்கு, மக்கள் விடுதலை முன்னணியினர், தமிழ்த் தேசியக் கட்சிகளை நோக்கி உங்களை தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டனர் எனக் கொக்கரிக்கிறார்கள். இந்த நிலை, கடந்த பொதுத் தேர்தலில், அநுர அலைக்குள் எந்தவித புரிதலும் இல்லாமல் தமிழ் மக்கள் சிக்கியதன் விளைவாக எழுந்தது. அநுர அலை தமிழ் மக்களுக்கு இதுவரையில் எந்தவித நல்ல மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, கடந்த கால ஆட்சியாளர்களின் செயற்பாடுகளை ஒத்த மேலாதிக்க நிலைப்பாடுகளை மாத்திரமே பிரதிபலித்திருக்கிறது. அப்படியான நிலையில், கடந்த பொதுத் தேர்தலில் அநுர அலைக்குள் அடிபட்டு அல்லாடியது போலல்லாது, தனித்த தமிழ்த் தேசிய அரசியலைக் காக்கும் நோக்கில், சிந்தித்து வாக்களிக்க வேண்டும். அப்போதுதான், ஒவ்வொரு கிராமத்தினதும் தேவைகள் உணர்ந்து விடயங்கள் அணுகப்படும். அத்தோடு, அடுத்த கட்டமாக நடைபெறப்போகும் மாகாண சபைத் தேர்தல்களில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆட்சி அமைப்பதற்கான கட்டங்களை நோக்கி நகர உதவும். இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தமிழ்த் தேசியக் கட்சிகள் மாத்திரமல்ல, தமிழ் மக்களும் ஏனோதானோ என்று அணுக முடியாது. தார்மீக நோக்கோடும், தமிழ்த் தேசிய அரசியலை மீட்டெடுத்து அரசியல் போராட்டத்துக்கான குரல் மங்கிவிடாமலும் இருப்பதற்கான கட்டங்களை நோக்கி நகர வேண்டும்.

இலங்கையின் மக்களாக சிந்திப்பதில் என்ன தப்பு என்ற கேள்விகள் அல்லது புரட்சிக் குரல்கள் எழலாம். அதுவும் தேசிய மக்கள் சக்தியின் தோழர்களும் சகோதரர்களும் தமிழ் மக்களை நோக்கி எழுப்பலாம். இலங்கையர்களாக சிந்திப்பது என்பது, முதலில் இலங்கையர்களாக உணர்வதற்கான ஏற்பாடுகளை ஆட்சியாளர்கள் செய்வதில் இருந்துதான் ஆரம்பிக்க முடியும். தொடர்ச்சியாக அடக்கியும் ஒடுக்கியும் வைத்துக் கொண்டு தமிழ் மக்களை ஆக்கிரமித்துக் கொள்ள முடியும் என்று சிந்திப்பது அபத்தமானது. அந்த சிந்தனைகளை புதிய புரட்சி மாற்றத்தின் பெயரினால் மாத்திரம் செய்துவிட முடியும் என்பதும் தார்மீகமாகாது. இலங்கையர்களாக தமிழ் மக்களை உணர வைப்பதற்கான ஏற்பாடுகளை, தென் இலங்கை ஆட்சியாளர்கள் செய்யாத வரையில், தமிழ்த் தேசிய அரசியல் போராட்டம் நிலைபெற வேண்டியது அவசியம். அந்த தார்மீகத்தை கடந்த காலத்தில் எமக்காக தங்களை அர்ப்பணித்துவிட்டவர்களை நினைத்து தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். அப்போதுதான், அடுத்த தலைமுறைக்குள் தமிழர் அடையாளம் மிஞ்சும். அதற்கு ஒவ்வொரு சின்னக் கட்டங்களிலும் எமது அரசியலைப் பிரதிபலிப்பது அவசியம். அந்த வகையில், இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் தமிழ் மக்கள் தங்களின் அரசியல் அடையாளத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.






# தேர்தல் அரசியலில் உத்தமர் யார்?



வி.எஸ்.சிவகரன்

அரசியல் என்பது அயோக்கியனின் கடைசிப் புகலிடம் எனும் மாக்கியவல்லியின் கூற்றை மெய்ப்பிக்காதவர் இந்த அரசியலில் நின்று நிதானிக்க முடியாது.

ஜனநாயகம் என்பது கும்பலின் ஆட்சி எனும் லெனின் கூற்றையும் நடைமுறைச் சாத்தியமாக்காதவர்கள் அரசியலின் இருப்பிடத்தில் இருந்து அகற்றப்படுவார்கள். ஏமாற்றுக்காரர்களாலும் தந்தரக்காரர்களாலும் சூழ்ச்சிக்காரர்களாலும் நயவஞ்சகக்காரர்களாலும்தான் இந்த அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள முடிகிறது என்பது எழுதப்படாத நவீன விதியாக விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு நல்ல அரசியல்வாதியுடைய அடிப்படை தகுதியும் இதுவாகவே பின்நவீனத்துவ சமூகத்தால் இரசித்து நுகரப்படுகிறது.

மாக்சினுடைய பொருள் முதல்வாத உறவு எனும் கூற்று இந்த உலகம் முழுவதும் அரசியலில் ஆட்கொண்டு விட்டது.

மூன்றாம் மண்டல நாடுகள் கடந்து அமெரிக்காவிலும் கூட அதுவே வெற்றியைத் தீர்மானிக்கின்ற இலக்காக காணப்படுகிறது. கோட்பாட்டை சித்தாந்தத்தின் அடிப்படையில் வழி வரைபடமாக நிலை நிறுத்தி தங்களைத் தாங்களே இனக்குழும ரீதியாக ஆட்சி செய்யக்கூடிய சமூகப் பொருளாதார, சூழலியல், வாழ்வியலை அடிப்படையாகக் கொண்ட சமூகக் கட்டமைப்பை உருவாக்குகின்ற கோட்பாட்டை நிலைநிறுத்த கூடியவர்களுக்கு இந்தச் சமூகம் அங்கீகாரம் கொடுப்பதில்லை.

காமராஜரையே தோற்கடித்த உலகம் இது. டொனால்ட் ட்ரம்ப் போன்ற கோமாளித்தனத்தையே இந்தச் சமூகம் அதிகம் விரும்புகிறது.

வைத்தியர் அர்ச்சுனாவை நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கியதும் இல்லாமல், இன்னும் அவரை ஆதரிக்க கூடிய மக்கள் இருக்கின்ற வரை இந்தச் சமூகம் அறிவார்ந்த சமூகமாக மேல் எழுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவே.

தென்னாசிய நாடுகளில் அரசியல் என்பது மேற்கூறிய வரைவிலக்கணங்கள்தான் வாக்கு பெறுவதற்கான மூலதனமாக அரசியல் கட்சிகள் உபயோகிப்பது வழமையாகி விட்டது. பணம் இருப்பவர்கள் தான் வாக்குப் பெறலாம் என்கின்ற அடிப்படையை உருவாக்கி விட்டது. கொள்கை ரீதியாகவோ கோட்பாட்டு ரீதியாகவோ வாக்களிப்பது என்பது மிகவும் குறைவடைந்துள்ளது. மக்களின் கூட்டு நம்பிக்கை பெறக்கூடிய கட்சிகளும் இல்லை, தனிமனித வசீகரமுடைய தலைவர்களும் இல்லை. பொது நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய எந்த செயற்றிட்டத்தையும் அரசியல் கட்சிகள் முன் வைப்பதில்லை. இந்தியா போன்ற நாடுகளிலே இலவசங்கள் அறிவிப்பும் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதும் சர்வ சாதாரணமாகிவிட்டது. தற்போது இலங்கையிலும் அது ஓரளவுக்கு நடைமுறைக்கு வருகின்றது.

கடந்த பல தசாப்தங்களாக எதிர்க்கட்சியிலிருந்து ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதையெல்லாம் செய்யக்கூடாது என கூறினார்களோ அதையே இன்று ஆட்சிக்கு வந்து செயல்படுத்துகிறார்கள்.

தூய தேசியவாதிகளாகத் தங்களைக் காட்டி, தங்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் திருடர்கள் என்று ஏமாற்றி, உண்மைக்கு மாறான கதைகளை எல்லாம் பேசினர். அவற்றை நம்பிய சிங்கள மக்கள் ராஜபக்ஷர்கள் மீது இருந்த கோபத்தினால் கிளர்ந்து எழுந்து வாக்களித்து ஆட்சி பீடத்தில் ஏற்றினர். ஆறு மாதம் கடந்து விட்ட பின்பும் அரை குறையாக கூட எந்த செயலும் அரங்கேறியதாக இல்லை. தற்போதும் கூட ஆட்சி அதிகாரம் தங்களிடம் இருப்பதை மறந்து அவ்வப்போது எதிர்க்கட்சியினர் போல் பொறுப்பில்லாமல் பேசி வருகின்றனர். நடைமுறைச் சாத்தியமற்ற தேர்தல் வாக்குறுதிகளை எல்லாம் வழங்கிவிட்டு அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமல் திணறுகின்றனர். பொருளாதார ரீதியாகவும் சரி, பன்னாட்டு இராஜீக இராஜதந்திர உறவுகளிலும் சரி, உள்நாட்டில் இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைக் கையாள்வதிலும் சரி, ஒரு முறைமையை உருவாக்காமல் காலத்தை நகர்த்தும் கைங்கரியத்திலே ஈடுபடுகின்றனர்.

மக்கள் மத்தியிலே வெறுப்பும் விசனமும் மிக விரைவாக ஏற்பட்டுவிட்டது. நிரந்தர வாக்கு வங்கி இல்லாத ஜே.வி.பி. மிதப்பு வாக்கு வங்கியில் தங்கியிருந்தது. ராஜபக்ஷக்கள் மீதான கடும் கோபத்தின் அறச்சீற்றமே மக்களை அவர்களுக்கு ஆதரவாக வாக்களிக்கத் தூண்டியது. ஆனால் அது இவர்களின் நிலையான வாக்கு வங்கி இல்லை என்பதனை அவர்கள் உணரவில்லை. இந்தத் தேர்தல் உணர்த்தலாம். ஜே.வி.பி. என்கின்ற கடந்த கால கறை படிந்த பக்கத்தை மறைத்து, தேசிய மக்கள் சக்தி எனல் பெயரை மாற்றிக் கொண்டாலும், எந்த சித்தாந்தத்திலிருந்து உருப்பேற்றார்களோ அந்த மரபணுவை இவர்களால் மாற்றி விட முடியவில்லை. ஊசி மூலைக் காட்டுக்குள்ளே ஒட்டகங்கள் போனாலும் சக்கு குணம் மாறாது என்கின்ற கிராமிய பழமொழி தான் இவர்களுக்கு மிகவும் பொருந்துகிறது .

கடந்த இரண்டு தேர்தல்களிலும் ஏமாற்று வார்த்தைகளால் வாக்காளர்களை கவர்ந்து வாக்கு பெற்று அதிகாரத்தை சுவைக்கும் இவர்கள். எத்தனை

தொடர்ச்சி▼



# தேர்தல் அரசியலில் உத்தமர் யார்?

தொடர்ச்சி▲

ஊழல்வாதிகளை சிறைக்கு அனுப்பினார்கள்? உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு உடனடியாக நடவடிக்கை எடுப்போம், குற்றவாளிகளை கைது செய்வோம் என்றார்கள். பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வெளிநாட்டு வங்கிகளிலே பதுக்கி வைத்திருக்கும் பணத்தை மீளக் கொண்டு வருவோம் என்றார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தில் திருத்தத்தை ஏற்படுத்தி மக்களுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய வழியை ஏற்படுத்துவோம் என்றார்கள். இன்னும் பல வாக்குறுதிகளை அள்ளி வீசினார்கள். அவர்களே எதிர்பார்க்காதது போல் ஆட்சி அதிகாரம் அவர்களிடத்தில் வந்தது. கடந்த 70 ஆண்டுகளிலேயே மாறி மாறி வாக்களித்து, இந்த நாடு இனவாத சகதிக்குள் ஊழலால் திளைத்துப் போன நிலையில் மக்கள் ஒரு மாற்றத்தை நோக்கி நகர்ந்து இருக்கிறார்கள். ஆனால் அந்த மாற்றம் வாக்களித்த மக்களுக்கு எந்த மாற்றத்தையோ ஏற்றத்தையோ ஏற்படுத்தியதாக இல்லை. தங்களுக்கு வாக்களிக்காத உள்ளூராட்சி மன்றங்களுக்கு பணம் வழங்குவதற்கு பலமுறை யோசிப்போம் என அப்பட்டமான தேர்தல் இலஞ்சத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சர்களும் ஈடுபடுகிறார்கள். இவர்களின் கட்சியிலே போட்டியிடுகின்ற பல வேட்பாளர்கள் போதைப்பொருள் வியாபாரிகள். மணல் மாபியாக்கள். ஏமாற்று பேர்வழிகள். மதுபான நிலைய உரிமையாளர்கள். ஊழல்வாதிகள். இவர்களிடம்தான் பணத்தை நம்பிக் கொடுக்கலாம் என ஜனாதிபதி கூறுகிறாரா? மன்னாரில் காற்றாலை, கனிம மண் அகழ்வு விடயங்களில் கூட ஜனாதிபதி முழுக்க முழுக்கஒ பொய்யான வாக்குறுதிகளை வழங்கி, அந்த மக்களிடமிருந்து வாக்குகளை பெறுகின்ற தந்திரமான காரியத்தில் ஈடுபடுகிறார். இன்னும் எத்தனை நாள்களுக்கு, எத்தனை தேர்தலுக்குத்தான் இந்த மக்கள் பொய்யையும் புரட்டையும் நம்ப போகிறார்களோ தெரியவில்லை. காலம் வெகு விரைவாக இவர்களினுடைய பொய் முகத்தை வெளிச்சமிட்டு காட்டும். தேர்தல் அரசியலில் ஜே.வி.பி. அரசாங்கமும் விதிவிலக்கு அல்ல என்பதனை உணர்த்துகிறார்கள். கம்யூனிச சித்தாந்தம் எனும் கவசம் மிக விரைவில் அரங்கில் இருந்து அகற்றப்பட போகிறது. அநுரகுமார திஸநாயக்கா அவதார புருசர் அல்லர், அவரும் சராசரி சிங்கள மேட்டிமைத்துவ அரசியல்வாதியே. அவர்களின் அடக்குமுறை ஏகாதிபத்திய மனோநிலை ஒருபோதும் மாறிவிடப் போவதில்லை.

யுத்த வெற்றி கதாநாயகர்களாக,சிங்கள மக்களின் ஆதர்ச யுக புருசர்களாக திகழ்ந்த ராஜபக்ஷக்களையே ஒரு தசாப்தத்துக்குள் மக்கள் விரட்டி விட்டார்கள். அவர்களை விடவா இவர்கள் வல்லவர்களாகி விடப் போகிறார்கள்?

வாக்களிப்பதற்கு முன்னதாக அரசியலின் அடிநாதத்தை மக்கள் குறைந்தபட்சமேனும் உணர்ந்து கொள்ள வேண்டும். இழக்க முடியாத அளவுக்கு இழப்புகள் அத்தனையையும் சந்தித்து நிர்க்கதி நிலையில் உயிரைத் தவிர வேறொன்றும் இல்லை என்றிருந்த மக்களினுடைய உணர்வுகளையே அழிப்பதற்கு பயன்படுத்திய கட்சியை, ஆதரிக்கின்ற மனோநிலைக்கு மக்கள் எப்படி வந்திருக்கிறார்கள்? இதை விட ஒரு விடுதலைக்குப் போராடிய இனத்தின் சாபக்கேட்டுக்கு வேறென்ன கூற முடியும்? தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வதற்கு துரோகிகளாகவும் எதிரிகளாகவும் இருந்தவர்களை நண்பர்களாக கைகோர்த்துக்கொள்ளக்கூடிய மனநிலை என்பது மிக ஆபத்தான சினேகிதமாகும். இந்த ஆபத்தை எதிர்கொள்ள க்கூடிய மக்களுக்கு அவர்களைச் சுற்றி எவ்விதமான தந்திரவலை பின்னப்படுகிறது என்பது புரியவில்லை. அந்தச் சக்கர வியூகப் பொறியில் தாங்கள் சிக்கப் போகிறார்கள் என்பதனை அறியாமல், பாவம் அவர்கள் சிங்கத்தின் கூண்டுக்குள் இருக்கிறோம் என்பதனை உணர்ந்து கொள்ள மறுக்கிறார்கள்.

ரான
தொடர்ச்சி▼





# தேர்தல் அரசியலில் உத்தமர் யார்?

தொடர்ச்சி▲

அதனை இந்த மக்களுக்கு உணர்த்த வேண்டிய தார்மீகப் பொறுப்பில் இருந்து தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள் தங்களுக்குள் பல கோணங்களாகப் பிரிந்து நின்று உட்கட்சி விமர்சனத்திலும் சக தமிழ்க் கட்சி விமர்சனத்திலும் திண்டாடுகின்றனர். அதனால் எப்படி பொது எதிரியை ஒன்று சேர்ந்து அகற்றுவதற்கான அடிப்படை உருவாக்குவது எனச் சிந்திக்காமல், தமக்குள்ளே அர்த்தமற்ற விவாதம் நடத்தி, காலத்தை வீணடித்து, மக்களை வெறுப்புக்கு உள்ளாக்கி, வேறு திசை நோக்கி நகர்த்திவிட்டார்கள்.

அரசியல் என்பது இப்போது சீன வர்த்தகம் போல் மாறிவிட்டது. கவர்ச்சி என்கின்ற மாய மானுக்குள் சிக்குண்டு அது சிதிலமடைகிறது. ஆத்மார்த்தமான உரைகளும் அதற்குப் பின் உள்ள கபடத்தனங்களும் வெளிச்சத்துக்கு வருகின்ற போதுதான் மக்கள் உணர்ந்து கொள்வார்கள் – இதுவரை காலமும் நாங்கள் இவ்வளவு மோசமானவர்களை நம்பியிருந்தோம் என்று.

தமிழ் கட்சிகள் மீது பல்வேறு விதமான விமர்சனங்களும் குற்றச்சாட்டுகளும் இருக்கலாம். ஆனால் ஒரு தேசமாக, ஓர் இனமாக எங்களை நாங்கள் ஆள்வதற்கும், எமது தனித்துவத்தை அடையாளங்களோடு பண்பாட்டியல் இருப்பை தனதாக்கிக் கொள்ளக் கூடிய வாழ்வியல் அறத்தை ஏற்படுத்துவதற்கும் நாம் முதலில் தமிழராக இருக்க வேண்டும்.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்னர் எப்படி எமது கலாச்சாரம் மாற்றம் அடைந்ததோ அல்லது இன்றைய புலம்பெயர்ந்த தேசத்தவர்களின் சுற்றுலா வருகையாலும், தொலைபேசி சமூக ஊடகங்களாலும் எப்படி எமது வாழ்வியல் இருப்பும் அற ஒழுக்கமும் ஆட்டம் காண்கிறதோ, அதைவிட மோசமாகும் சிங்கள கட்சிகளுக்குள் கரைந்து போவது என்பது. அது, நாம் தற்கொலை செய்வதற்கு நிகரானதாக இருக்கும்.

இந்த மக்களை வழிப்படுத்த தவறிய தமிழ்த் தலைமைகள் இந்த தேர்தலுக்குப் பின்னராவது சிந்திக்க வேண்டும். இல்லையேல் தமது கட்சிகளை கலைத்து விட்டு வேறு வழியைத்தான் பார்க்க வேண்டும். ஒவ்வொருவரும் வாக்களிக்க முன்னர் நான் யார், எனது இனம் என்ன, எனது எதிர்காலம் என்ன, எனது அடுத்த சந்ததியின் வாழ்வியல் உரிமை என்ன, எனது பண்பாட்டியல் மரபை எப்படி நான் கடத்தப் போகிறேன், எனது நிலத்தின் இருப்பை நான் எப்படி தற்காத்துக் கொள்ள போகிறேன் என்கின்ற கேள்விகளை உங்களுக்குள் எழுப்பி விட்டு வாக்களிக்கச் செல்லுங்கள். பொய்யும் புரட்டும் ஏமாற்றுக்கும் ஆயுள் குறைவு. பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடையாது என்கின்ற அறக்கூற்று கிராமிய வார்த்தை சில காலத்திலே மெய்ப்பிக்கும் என்பதே வரலாற்று ஓட்டம். அதற்கு ஜே.வி.பியும் விதிவிலக்கு அல்ல என்பதைக் காலம் உணர்த்தும்.





# அமைதியும் சமாதானமும் மக்களிலும் நிலைக்கட்டும்!

இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம் உயிர்ப்பை நினைவு கூரும் தவக் காலத்தின் இறுதி நாளான இன்று உயிர்த்த ஞாயிறு அனுஷ்டிக்கப்படுகிறது. இன்றைய தினம் கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட பிரார்த்தனைகள் இடம்பெறுவதுடன், கிறிஸ்தவ மக்கள் மானுட மகனின் உயிர்ப்பை கொண்டாடுவதற்கு தயராகியுள்ளனர்.

தவக்காலம் கிறிஸ்தவர்களின் புனித நாள்காட்டின் மிக முக்கியமான காலமாகும். 40 நாள்களைக் கொண்ட தவக் காலத்தின் இறுதியில் பாஸ்கா விழா கொண்டாடப்படுகிறது.

உலக மக்களின் பாவங்களைப் போக்குவதற்காக இறைவன் இந்த உலகுக்கு அனுப்பிய தன்னுடைய மகன் இயேசு கிறிஸ்து, இறை தூதராக தனது வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்த நிலையில், மக்களின் துயர் நீக்க வந்த இயேசுவை வெறுத்த யூதர் கூட்டம் அவருக்கு சிலுவைச் சாவை தீர்ப்பிட்டது.

பாரமான சிலுவையை சுமந்து கல்வாரி மலையின் உச்சியில் சிலுவையில் அறையப்பட்ட இயேசு அதில் உயிர்நீத்தார். பெரிய வெள்ளி தினத்தில் அவரின் பாடுகளும் மரணங்களும் தியானிக்கப்படுகின்றது.

மறை நூலில் உள்ளதை நிரூபிக்கும் வகையில் மரணித்து 3 நாள்களில் உயிர்த்தெழுந்த இயேசு விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவரது உயிர்ப்பு விழாவினை கிறிஸ்தவர்கள் பாஸ்கா பெருவிழாவாக கொண்டாடுகின்றனர். பாஸ்கா என்பது அரமேய மொழிச் சொல்லாகும். இதற்கு அர்த்தம் 'கடந்து போதல்'.

திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் குறிப்பிட்டுள்ளமைக்கு அமைய அக்காலத்தில் எகிப்தில் இஸ்ரேல் மக்கள் அடிமைகளாக வாழ்ந்தனர். இஸ்ரேல் மக்களை அங்கிருந்து விடுவிப்பதற்கான இறைவன் மோசேயை தேர்ந்தெடுத்தார்.

மோசேயின் வழிகாட்டலில் எகிப்திலிருந்து இஸ்ரேல் மக்கள் மீட்பு பெற்ற அந்த நிலப் பகுதியை கைவிட்டு கடவுள் வாக்குறுதியளித்த கானான்தேசம் நோக்கி சென்றனர். அவ்வாறு அவர்கள் எகிப்திலிருந்து மீட்பு பெற்றதன் நினைவாக யூதப் பெருவிழா கொண்டாடப்பட்டது.

புதிய ஏற்பாட்டில் பாஸ்கா தினத்தில் கடவுளின் மகனின் தியாகத்தை நினைத்து அந்த விழாவை கிறிஸ்தவர்கள் கொண்டாடினர்.





# சாவின் மேல் வாழ்வு பெற்ற வெற்றியை இயேசுவின் உயிர்ப்புக் காட்டுகின்றது

## மன்னார் மறைமாவட்ட ஆயர் உயிர்ப்புப் பெருவிழாச் செய்து

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

இயேசுவின் உயிர்ப்பு மனுக்குலத்துக்கு ஒரு நம்பிக்கையை வழங்கியுள்ளது. இயேசுவின் உயிர்ப்பு நமக்கு ஆறுதலின் செய்தியைத் தருகிறது. அதாவது நமது பாடுகளின் பின்னால் நமக்கும் உயிர்ப்பு வெற்றி உண்டு என்பதே அச்செய்தி என மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் விடுத்துள்ள உயிர்ப்புப் பெருவிழா செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

ஈஸ்டர் பெருவிழா என்பது இயேசுவின் உயிர்ப்பை கொண்டாடும் விழாவாகும். இது கிறிஸ்தவர்களின் உயிர்நாடியான விழாவாகும். தவக்காலம் என்று சொல்லப்படுகின்ற நாற்பது நாட்கள் ஒறுத்தல், தவ முயற்சிகளை மேற்கொண்டு கிறிஸ்தவர்கள் தங்களை ஆன்மீக ரீதியில் ஆயத்தம் செய்து புனித வாரத்திற்குள் நுழைகின்றனர்.

இந்தப் புனித வாரத்தில் வரும் முக்கிய நாள்களான பெரிய வியாழன், பெரிய வெள்ளி, புனித சனி, உயிர்ப்பு ஞாயிறு ஆகியவை கிறிஸ்தவர்களின் விசுவாச வாழ்வில் ஒரு மிக முக்கியமான, புனிதமான நாள்களாகும்.

இயேசுவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை மிகுந்த பக்தி வணக்கத்தோடு இந்நாட்களில் கிறிஸ்தவர்கள் நினைவு கூறுகின்றனர். இயேசுவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை ஒன்று சேர்த்து “பாஸ்கா விழா” என அழைக்கின்றனர். இயேசுவின் உயிர்ப்பு கிறிஸ்தவ நம்பிக்கையின் அடிப்படையாகும்.

இயேசுவின் உயிர்ப்பு குறித்து புனித பவுல் குறிப்பிடும் போது, “கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பொருளற்றதாகி விடும்“ என்கிறார். எனவே கிறிஸ்தவ சமயத்தின் அடிப்படையாக, அத்திவாரமாக, ஆணிவேராக இருப்பது இயேசுவின் உயிர்ப்பு நிகழ்வாகும். இயேசுவின் உயிர்ப்பில் தான் கிறிஸ்தவம் கட்டப்பட்டுள்ளது.

மனிதனின் அறிவியல் வளர்ச்சி எவ்வளவு உயர்ந்து சென்றாலும் மரணத்திற்குப் பின்னர் மனிதனுக்கு என்ன நடக்கிறது என்பதைக் குறித்து மனித அறிவியல் தெளிவான விளக்கத்தை இதுவரை தரவில்லை. ஆனால் கிறிஸ்தவ நம்பிக்கை அதற்குத் தெளிவான பதிலை தருகிறது.

அப்பத்தில் இயேசுவின் உயிர்ப்பை அடிப்படையாகக் கொண்டதாகும். இயேசுவின் உயிர்ப்பு சாவின் மேல் வாழ்வு பெற்றுக்கொண்ட வெற்றியை எடுத்துக்காட்டுகின்றது. கிறிஸ்தவ பாரம்பரியத்தில் கிறிஸ்துவின் உயிர்ப்பு என்பது சாவின் மேல் இயேசு ஏற்படுத்திய வெற்றியை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் பெறக்கூடிய



விண்ணக வாழ்வின் நம்பிக்கையை வழங்குகின்றது.

இயேசுவின் உயிர்ப்பு மனுக்குலத்துக்கு ஒரு நம்பிக்கையை வழங்கியுள்ளது. இயேசுவின் உயிர்ப்பு நமக்கு ஆறுதலின் செய்தியை தருகிறது. அதாவது நமது பாடுகளின் பின்னால் நமக்கும் உயிர்ப்பு, வெற்றி உண்டு என்பதே அச்செய்தி. இயேசுவின் பாடுகள் மரணத்தோடு அவருடைய வாழ்வு முற்றுப் பெறவில்லை. இயேசுவின் சீடர்கள் கூட ஆரம்பத்தில் அப்படித்தான் நினைத்தார்கள்.

நம்பிக்கை இழந்து நின்றார்கள். ஆனால் இயேசு இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார், வெற்றிவாகை சூடினார். நம்முடைய வாழ்வும் பாடுகள் நிறைந்த வாழ்வுதான். துன்பங்கள், போராட்டங்கள் நிறைந்த வாழ்வுதான்.

ஆனாலும் நாம் நம்பிக்கை இழக்கக்கூடாது, வாழ்க்கையில் விரக்தி அடையக்கூடாது. காரணம் இயேசு தனது துன்பத்தை, சிலுவைப் பாடுகளைக் கடந்து உயிர்ப்பின் வெற்றியை அடைந்தது போல, விண்ணேற்றமடைந்து மகிமை பெற்றதைப் போல, நாமும் வெற்றியை, மகிமையைப் பெறுவோம் என நம்புவதற்கு இயேசுவின் உயிர்ப்பு நமக்கு உறுதிப்பாட்டை தருகிறது.

உங்கள் அனைவருக்கும் எனது உயிர்ப்பு பெருவிழா வாழ்த்துக்கள் .அன்னை மரியாவின் வழியாக மருதமடு அன்னையின் பரிந்துரை ஊடாக உங்கள் அனைவரையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!- என மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# தீயவற்றை விழச் செய்து புனிதத்தை உயர்த்துவோம்’ அநீதியை விழச்செய்து நீதியை நிலைநாட்டுவோம்!

## மன்னார் மறை மாவட்ட குரு முதல்வரின் ஈஸ்டர் செய்தி

‘மண்ணின் மீது மனிதனுக்காசை மனிதன் மீது மண்ணுக்காசை. மண் தான் கடைசியில் ஜெயிக்கிறது. இதை மனம்தான் உணர மறுக்கிறது’ எனக் கவிஞர் வைரமுத்து எழுதியுள்ளார். மண் மனிதர்களை வெற்றி கொள்கிறது என்பது மனிதர்களைப் பொறுத்தவரை உண்மையாக இருக்கலாம். ஆனால் இயேசுவைப் பொறுத்தவரை அது உண்மையில்லை.

கல்லறையால் இயேசுவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆயிரக் கணக்கான யூதர்களைக் கொன்ற கிட்லருடைய கல்லறை மூடியே கிடக்கிறது. உலகை வென்று வெற்றிக்கொடி நாட்டிய மகா அலெக்சாண்டருடைய கல்லறையை யாரும் நினைத்துப் பார்ப்பதில்லை. வெற்றிக்கு மேல் வெற்றியைக் குவித்த நெப்போலியனின் கல்லறை கேட்பாரற்றுக் கிடக்கிறது. ஆனால் இயேசுவின் கல்லறை. அவை வரலாற்றுக் கல்லறைகள்!

ஜெருசலேமில் இயேசு அடக்கம் செய்யப்பட்ட கல்லறை நுழைவாயிலில் ‘இவர் இங்கே இல்லை’ என்ற வார்த்தைகள் பொறிக்கப்பட்டுள்ளன. இயேசுவின் காலியான கல்லறை புதிய நம்பிக்கையின் அடையாளமாகும். இருள் ஒருபோதும் ஒளியை வெற்றிகொள்ள முடியாது. தீமை ஒருபோதும் நன்மையை வெற்றிகொள்ள முடியாது.

இயேசுவைச் சாவு தன் மடியில் வைத்திருக்க முடியவில்லை. சூரியனை திரைகொண்டு மூட முடியுமா? இயேசு வெற்றி வீரராய் பெரும் சுடராய் உயிர்த்தெழுந்தார். ஆம், கல்லறை திறந்த துளூா காரிருள் மறைந்தது. கர்த்தர் இயேசு கன்ம வீரராய் உயிர்த்தெழுந்தார். சாவு வீழ்ந்தது வாழ்வு வந்தது. மனுக்குலம் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் துள்ளிக் குதித்தது!

‘இயேசுவைக் கொன்று விட்டோம், அவனை மண் தின்று விட்டது’ என்று கொக்கரித்தவர்களின் கனவு நனவாகவில்லை. ‘சரித்திரம் படைக்க வந்த இயேசுவுக்கு சமாதி கட்டி விட்டோம்’ என்று சந்தோஷித்தவர்களின் சந்தோஷம் நீடிக்கவில்லை. சரித்திர நாயகன் இயேசு விசித்திரமாய் உயிர் பெற்றெழுந்தார். சத்தியத்துக்குச் சான்று பகர வந்த இயேசு நித்தியத்திற்கும் வாழுகின்றவராய் உயிர் பெற்று எழுந்தார்.

அருட்தந்தை அய்வன் பெட்டன்கூட் என்பவர் மத்திய அமெரிக்காவில் வாழ்ந்த ஒரு குருவானவர். இவர் 1976இல் கொலை செய்யப்பட்டார். அவர் அங்கம் அங்கமாக அறுக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார். ‘நீ ஏழைகளுக்காக போராடுவதை நிறுத்து’ எனக் கோரப்பட்டார். உடலின் இறுதி அங்கம் அறுக்கப்பட்டு சாகும்வரை, ‘நான் கோதுமையாக சிதைகிறேன். மீண்டும் முளைப்பேன்’ என்று கூறி இறந்தார். ஆயர் ஒஸ்கார் றொமேரோ, ‘நான் இறந்தாலும் இந்நாட்டு மக்களில் மீண்டும் உயிர்ப்பேன்’ என்ற உறுதியோடு இறந்தார்.

சாதாரணமானவர்களுக்கு வாழ்வு சாவில் முடியலாம். ஆனால் மாவீரர்களுக்கு இலட்சியவாதிகளுக்கு சாவிலும் வாழ்வு தொடர்கிறது. இலட்சியவாதிகளை அழிக்கலாம். ஆனால் அவர்களின் இலட்சியங்களை அழிக்கமுடியாது.

கூட்டை உடைத்துக்கொண்டு குஞ்சுகள் வெளிவருவதுபோல பாறையை உடைத்துக்கொண்டு இயேசு உயிர்த்தார். இயேசுவின் உயிர்ப்பு அவருடைய மானிப்பிறப்பிற்குக் கிடைத்த வெற்றி. உண்மைக்குக் கிடைத்த வெற்றி. நீதிக்குக் கிடைத்த வெற்றி. ஆம் இன்று உயிர்ப்பு விழா! கல்லறை பிளந்த விழா! பூமி அதிர்ந்த விழா! பாவம் தோற்ற விழா! மீட்பு மலர்ந்த விழா! இயேசுவின் உயிர்ப்பு சாவின் சக்திகளுக்கு முடிவு கட்டியது. சாத்தானின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது. ‘மரணமே உன் கூர் எங்கே? மரணமே உன் கொடுக்கு எங்கே? எனக் கேட்டவர், சாவுக்கு சாவு மணி அடித்தவராக உயிர்த்துவிட்டார்.

இயேசு கல்லறைக்குள் புதைக்கப்படவில்லை. மாறாக விதைக்கப்பட்டார். இயேசுவின் அடக்கம் என்பது புதிய வாழ்வின் தொடக்கம். இயேசுவின் மரணம் என்பது புதிய வாழ்வின் ஜெனனம். இயேசுவின் இவ்வுலக முடிவு என்பது மறுவுலக வாழ்வின் விடிவு.

கிறிஸ்தவத்தின் அத்திவாரமாக ஆணிவேராக இருப்பது இயேசுவின் உயிர்ப்பே. இயேசுவின் உயிர்ப்புத்தான் கிறிஸ்தவ விசுவாசத்தின் அடிப்படை. இயேசுவின் உயிர்ப்புத்தான் கிறிஸ்தவ விசுவாசத்தின் மையம். 1 கொரி. 15: 14 இல் ‘கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் பொருளற்றதாகிவிடும்’ என்கிறார் புனித பவுல். ‘கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய அப்படியே இருக்கும். மடிந்தால்தான் அது பலன் கொடுக்கும்’ என்று கூறிய இயேசு, தான் கூறிய இலக்கணத்துக்கு தானே இலக்கியமானார்.

ஒரு ஊரில் பஞ்சம் ஏற்பட்டது. பிழைப்புத்தேடி சென்றது ஓர் குடும்பம். தந்தை தனது இரு குழந்தைகளையும் சுமந்து சென்றார். நீண்ட பயணத்தால் நோய் வாய்ப்பட்ட குழந்தை ஒன்று வழியிலேயே இறந்துவிட்டது. நல்ல இடத்தில் இறந்த குழந்தையை புதைத்துவிட்டுச் செல்லலாம் எனத் தொடர்ந்து சுமந்து சென்றார் தந்தை. இரவானதும் மீண்டும் சுமக்க இயலாமல் ஒரு குழந்தையை அடக்கம்செய்துவிட்டு, மற்றக் குழந்தையுடன் சென்றார்கள். காலையானதும் தோளில் உறங்கும் குழந்தையை எழுப்பினர். அப்பொழுது தான் அவர்களுக்குத் தெரிந்தது உயிருள்ள குழந்தையை வழியில் அடக்கம் செய்துவிட்டு இறந்த குழந்தையை சுமந்து வந்தனர் என்று.

இப்பெற்றோர் இறந்த குழந்தையில் உயிருள்ளதைத் தேடினர்! உயிருள்ளது இங்கு இல்லை. ‘உயிரோடு இருப்பவரை ஏன் கல்லறையில் தேடுகிறீர்கள்’ என்று வானதூதர் பெண்களிடம் கேட்கின்றனர். கிறிஸ்தவம் உயிர்த்த கிறிஸ்துவின் கல்லறையைத் தாண்டி தொடர்ந்து வாழ்வது.

சிறையில் அடைக்கப்பட்ட சோக்ரீட்டிசிடம் அவரைத் தப்புவிக்க நண்பர்கள் கேட்டபோது, அவர், வாழ்வை அன்பு செய்யாதவர்கள் வாழாதவர்களே! அவர்களே சாவை சந்திக்க அச்சம் கொள்வர்’

தொடர்ச்சி▼

# தீயவற்றை விழச் செய்து புனிதத்தை உயர்த்துவோம்' அநீதியை விழச்செய்து நீதியை நிலைநாட்டுவோம்!

## மன்னார் மறை மாவட்ட குரு முதல்வரின் ஈஸ்டர் செய்தி

தொடர்ச்சி▲

என்றார். யாருக்கு சாவை சந்திக்க அச்சம்? வாழ்வை உண்மையாக, நேர்மையாக, நிறைவாக வாழாதவர்களே சாவைச் சந்திக்க அச்சம் கொள்வர்.

இயேசுவின் பாடுகள் மரணத்தோடு அவருடைய வாழ்வு முற்றுப்பெறவில்லை. அவர் உயிர்த்தார். நம்முடைய வாழ்வும் பாடுகள் நிறைந்த வாழ்வுதான்! போராட்டங்கள் நிறைந்த வாழ்வுதான்! வாழ்க்கை என்பது போராட்டம். 'ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே வாழ்வென்றால் போராடும் போர்க்களமே. ஒவ்வொரு விடியலுமே சொல்கிறதே இரவென்றால் பகலொன்று வந்திடுமே!' தாய் பிரசவ வேதனையை ஏற்க மறுத்தால் குழந்தை நலமாகப் பிறக்க முடியது. நோயாளி மருத்தவரின் ஊசியை ஏற்க மறுத்தால் அவர் நலமடைய முடியாது. ஆம் இயேசுவின் உயிர்ப்பு நமக்கு நம்பிக்கையைத் தருகின்றது.

'இறந்தேன் ஆயினும் இதோ நான் என்றென்றும் உயிர் வாழ்கிறேன்' எனத் திருவெளிப்பாடு நூலில் இயேசு கூறுகின்றார். நமது இறைவன் இறந்தோரின் கடவுள் அல்ல. அவர் வாழ்வோரின் கடவுள். நமது துன்பங்களைக் கண்டு நாம் மனம் உடைந்துபோகத்தேவையில்லை. ஏனெனில் இயேசு நம்மோடு உயிர்வாழ்கிறார். நம்மோடு இருக்கின்றார், நம்மோடு நடக்கின்றார்.

இயேசுவின் உயிர்ப்பு என்பது வெறும் செய்தி அல்ல. வெறும் கேள்விப்பட்ட தகவல் அல்ல. அது சீடர்கள் நேரில் கண்டு பெற்றுக்கொண்ட இறை அனுபவம். அது ஆதித்திருச்சபையின் அடிமனதில் ஆழமாகப் பதிந்துவிட்ட அனுபவம்! அவர்களின் நாடி நரம்புகளை முறுக்கேற்றிவிட்ட அனுபவம்! இயேசு உயிர்த்தார் என்பது வெறும் விசுவாச சத்தியம் மட்டுமல்ல. அது ஆதித் திருச்சபையின் வாழ்க்கை அனுபவமாக இருந்தது. இயேசுவின் உயிர்ப்புக்கு நாம் சாட்சி பகரவேண்டும். எப்படி? நமது வாழ்வால் நாம் சாட்சிபகரவேண்டும்.

இயேசு பாடுகள் பட்டபோது பயந்து ஓடி ஒழித்துக்கொண்ட சீடர்கள், இயேசு உயிர்த்தபோது புதிய உணர்வு பெறுகிறார்கள். புத்துயிர் பெறுகிறார்கள். நம்பிக்கை இழந்து பயந்துபோய் முடங்கிக் கிடந்த சீடர்கள் புத்தெழுச்சி பெறுகிறார்கள். இயேசுவின் உயிர்ப்பு அவர்தம் சீடர்களுக்கு புதிய உற்சாகத்தைக் கொடுத்தது. ஆண்டவர் மட்டும் உயிர்க்கவில்லை. அவரோடு அவருடைய சீடர்களும் உயிர்த்து எழுந்தார்கள். கோழைத் தனத்திலிருந்து துணிவுக்கு உயிர்த்து எழுந்தார்கள். அவவிசுவாசத்தில் இருந்து விசுவாசத்திற்கு உயிர்த்து எழுந்தார்கள். அறியாமையில் இருந்து தெளிவுக்கு உயிர்த்து எழுந்தார்கள். ஆம், பொய்மையில் இருந்து மெய்மைக்கு உயிர்த்து எழுந்தார்கள். இருளில் இருந்து ஒளிக்கு உயிர்த்தெழுந்தார்கள். சாவில் இருந்து வாழ்வுக்கு உயிர்த்தெழுந்தார்கள்.

இயேசுவின் உயிர்ப்பால் அவருடைய சீடர்களும் உறுதி பெற்றார்கள். அதனால் தான் இயேசுவினுடைய செய்தியை அறிவிக்க அவர்கள் நாடு நகரங்களைக் கடந்து போனார்கள். காடு கடல்களை கடந்து கனதூரப் பயணம் போனார்கள். சாதாரண கலிலேயர்கள் உலகப் பேரரசுகளின் அடித்தளத்தளங்களையே ஆட்டம் காணச் செய்யும் அளவுக்கு ஆற்றல் பெற்றது இயேசுவினுடைய உயிர்ப்பின் அனுபவத்தினால் தான்.

இயேசுவின் உயிர்ப்பால் உயிர்ப்புப் பெற்ற சீடர்களைப்போல நாமும் உயிர்க்க வேண்டும். இயேசுவினுடைய உயிர்ப்பின் செய்தி நம்மையும் உணர்ச்சியுள்ள மனிதர்களாக துடித்தெழச் செய்ய வேண்டும். பழையன கழிந்து புதிய படைப்பாக மாறுவோம். தீயவற்றை விழச் செய்து புனிதத்தை உயர்த்துவோம். அநீதியை விழச்செய்து நீதியை நிலைநாட்டுவோம். இருளை விழச்செய்து ஒளியை ஏற்றுவோம். தீமையை தூக்கி எறிந்து நன்மையை நிலைநாட்டுவோம்.

நாமும் நமது பாவத்தில் இருந்து சாபத்தில் இருந்து உயிர்க்க வேண்டும். சுயநலப் பிடியில் இருந்து நாம் உயிர்க்க வேண்டும். நம்மிடமுள்ள துர்க்குணங்களில் இருந்து நாம் உயிர்க்க வேண்டும். நம்மிடமுள்ள பாவப் பழக்கத்தில் இருந்து நாம் உயிர்க்க வேண்டும். நம்மிடமுள்ள அறியாமையில் இருந்து நாம் உயிர்க்க வேண்டும். இல்லையேல் இயேசுவின் உயிர்ப்பு நம்மைப் பொறுத்தவரை அர்த்தமற்றதாகிவிடும்.

**அருட்தந்தை**
**தமிழ் நேசன் அடிகளார்,**
**மறைமாவட்ட குரு முதல்வர்,**
**மன்னார்.**

# குறுகிய அரசியல் நோக்கங்களைத் தள்ளி உண்மையைக் கண்டறிய அணிதிரளுவோம்!

## எதிர்க்கட்சித் தலைவரின் ஈஸ்டர் செய்தி



கடவுளின் குமாரனாகக் கருதப்படும் இயேசு கிறிஸ்து மரணத்தை வென்று உயிர்த்தெழுந்ததை நினைவுகூரும் வகையில், உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்களைப் போலவே, நமது நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களும் ஈஸ்டர் தினத்தை உற்சாகத்துடன் கொண்டாடுகின்றனர்.

இயேசு கிறிஸ்து மனித இதயத்தில் உள்ள இருளை அகற்றி, புதிய நம்பிக்கையை வழங்கி, மனித வாழ்க்கையை மாற்றும் திறனை வெளிப்படுத்தியது இதன் சிறப்பம்சமாகக் கருதலாம். ஆனால், 2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தன்று நமது நாட்டில் கத்தோலிக்க தேவாலயங்கள் மற்றும் சில ஹோட்டல்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட அந்த மனிதாபிமானமற்ற தற்கொலைத் தாக்குதலால் இன்றும் நமது நாட்டின் கத்தோலிக்க மக்கள் பெரும் துயரத்தில் உள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பிறகு, அதைப் பயன்படுத்தி அரசியல் அதிகாரத்தைப் பெற்ற சில அரசியல் கட்சிகளின் கீழும், தற்போதைய அரசின் கீழும், இந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகளுக்கு உரிய தண்டனை வழங்க முடியாததால், 6 ஆண்டுகள் கடந்தும், இந்தத் தாக்குதலில் உயிரிழந்த, கைகால்களை இழந்த, உறவினர்களையும் நண்பர்களையும் இழந்த மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என்பது தெரிகிறது.

தேர்தல் காலத்தில் பல்வேறு தரப்பினரும் இவர்கள் இழந்த நீதியை வழங்குவதாக அரசியல் மேடைகளில் சத்தமிட்டாலும், அதிகாரத்தைப் பெற்ற பிறகு எந்த ஆட்சியாளரும் இவர்களுக்குரிய நீதியை வழங்க விரும்பவில்லை என்பது இன்றும் தெளிவான உண்மையாகும்.

எனவே, வீண் பேச்சுக்களையும், பொய் வாக்குறுதிகளையும் தவிர்த்து, இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் நீதி கிடைக்க அனைவரும் செயல்பட வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கங்களையும், பிற்போக்குத்தனமான போக்குகளையும் கடந்து, அனைவரும் ஒன்றிணைந்து நாடாக நல்ல எதிர்காலப் பயணத்துக்காக அணிதிரள வேண்டும் என இறுதியாக அனைவரிடமும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**சஜித் பிரேமதாஸ,**
**இலங்கை நாடாளுமன்றத்தின்**
**எதிர்க்கட்சித் தலைவர்**

# அ.தி.மு.க – பா.ஜ.க. கூட்டணிக்கு எதிராக தி.மு.கவினர் துண்டு பிரசுரம் விநியோகம்



எடப்பாடியில் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணிக்கு எதிராக பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி தி.மு.கவினர் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழகத்தில் அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டபேரவை தேர்தலை சந்திக்கஉள்ளதாகவும், பா.ஜ.கவும், அ.தி.மு.கவும் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்கும் என மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

இந்த கூட்டணி குறித்து தி.மு.க. மற்றும் அதன் கூட்டணி கட்சி தலைவர்கள் விமர்சனம் செய்து வருகின்றனர். அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி எதிராக, சேலம் மாவட்டம் எடப்பாடியில் தி.மு.கவினர் பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி பிரச்சாரத்தில் நேற்று ஈடுபட்டனர்.

எடப்பாடி தி.மு.க. நகராட்சி தலைவர் பாஷா தலைமையில் பஸ் நிலையம் பகுதிகளில் தி.மு.க. நிர்வாகிகள் குவிந்தனர். பின்னர், அப்பகுதியில் வீதியோரத்தில் கடை நடத்தி வரும் வியாபாரிகள், பொதுமக்கள் ஆகியோரிடம் அ.தி.மு.க. –பா.ஜ.க. மத்திய மாநில ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட நீட் தேர்வு, சி.ஏ.ஏ. சட்டம், புதிய வேளாண் சட்டம், உதய் மின் திட்டம், புதிய குடியுரிமை சட்டம் உள்ளிட்ட பல வேறு சட்டங்களுக்கு துணை நின்ற அ.தி.மு.கவிற்கான எதிரான கருத்துக்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி கூட்டணிக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

மேலும், இந்தி திணிப்பு, நிதிப்பகிர்வில் பாரபட்சம், கல்விநிதி மறுப்பு, தொகுதி மறுசீரமைப்பு என பா.ஜ.க. அரசின் அனைத்து துரோகங்களும் துணை நின்ற கூட்டணி அமைத்துள்ள அடிமை அ.தி.மு.கவின் முகத்திரை கிழித்து விரட்டி அடிப்போம் எனவும், வஞ்சக பா.ஜ.க. – துரோக அ.தி.மு.க. கூட்டணிடமிருந்து தமிழ்நாட்டை பாதுகாப்போம் போன்ற வசனங்கள் அடங்கிய துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது.



# டில்லி கட்டட விபத்து உயிரிழப்பு எண்ணிக்கை 11 ஆக அதிகரிப்பு

## உரிமையாளரும் உயிரிழப்பு

டில்லியில் உள்ள முஸ்தபாபாத் பகுதியில் நேற்று காலையில் இடம்பெற்ற கட்டட விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்துள்ளது. இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் நடந்து வருகின்றன.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் பட்டியலை டில்லி பொலிஸார் வெளியிட்டுள்ளனர். அந்தப்பட்டியலின் படி, உயிரிழந்தவர்களில் இடிந்து விழுந்த கட்டடத்தின் உரிமையாளரும் இருப்பது உறுதியாகியுள்ளது. உயிரிழந்த 11 பேரில் 8 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்களில் மூன்று பேர் பெண்கள். நான்கு குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர்.

பொலிஸாரின் பட்டியலின் படி, இடிபாடுகளில் சிக்கி 11 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் 6 பேர் சிகிச்சைக்கு பின்னர் மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். 5 பேர் இன்னும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இடிபாடுகளில் சிக்கியிருக்கும் எஞ்சியவர்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன.

தலைநகர் டில்லியின் வடகிழக்கு பகுதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலையில் நான்கு மாடி கட்டடம் இடிந்து விழுந்தது. டில்லியின் முஸ்தபாபாத் பகுதியில் இந்தச் சம்பவம் அதிகாலை 3 மணி அளவில் நடந்துள்ளது. சம்பவம் குறித்த தகவல் கிடைத்ததும் அந்த இடத்துக்கு தேசிய பேரிடர் மீட்பு படையினர், தீயணைப்பு படையினர் மற்றும் பொலிஸார் விரைந்து சென்று, மீட்பு பணிகளை மேற்கொண்டனர்.

இதுகுறித்து தீயணைப்பு துறை அதிகாரி ராஜேந்திர அத்வால் கூறுகையில், “எங்களுக்கு அதிகாலை 3 மணி அளவில் கட்டடம் இடிந்து விழுந்தது குறித்த தகவல் கிடைத்தது. உடனடியாக நாங்கள் இங்கு விரைந்து வந்தோம். இந்த நான்கு மாடி கட்டடம் முழுவதுமாக இடிந்து விழுந்துள்ளது. இதன் இடிபாடுகளில் மக்கள் சிக்கி உள்ளனர். தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் தீயணைப்பு படையினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்” என்றார்.




# சீனக் கப்பல்களுக்கு துறைமுக கட்டணம் விதிப்பதற்கு டொனால்ட் ட்ரம்ப் திட்டம்

சீன கப்பல்களுக்கு துறைமுகக் கட்டணம் விதிக்க டொனால்ட் ட்ரம்ப்பின் அரசு திட்டமிட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கப்பல் கட்டும் தொழிலில் சீனா ஆதிக்கம் செலுத்தி வருகின்றமையினால் அமெரிக்க கப்பல் கட்டும் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அமெரிக்க கப்பல் கட்டும் துறையை முன்னேற்ற டொனால்ட் ட்ரம்ப்பின் அரசு, சீன சரக்குக் கப்பல்களுக்கு சிறப்பு துறைமுகக் கட்டணம் விதிக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதாவது, சீன கப்பல்களை சொந்தமாக வைத்திருக்கும் நிறுவனங்கள், ஒப்பந்த முறையில் பயன்படுத்தும் நிறுவனங்களுக்கு சிறப்பு துறைமுகக் கட்டணம் விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தொன் சரக்குக்கு 50 டொலர் என்ற விகிதத்தில், இந்தக் கட்டணம் வசூலிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் கருத்து தெரிவிக்கையில்,"இத்தகையகட்டணங்களால் பொருள்களின் விலை அதிகரித்து அமெரிக்க நுகர்வோர்தான் பாதிக்கப்படுவார்கள். ஆனால் நாட்டு கப்பல் கட்டும் தொழிலை அது மேம்படுத்தாது." என்று குறிப்பிட்டுள்ளார்.

# உலக விஞ்ஞானிகளை பிரான்ஸுக்கு அழைக்கிறார் இம்மானுவேல் மேக்ரான்



பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரான் உலகளாவிய விஞ்ஞானிகளை பிரான்ஸுக்கு வரவேற்பதாக அழைப்பு விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்களுக்கு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகம் நிதி நிறுத்தங்களை மேற்கொண்டு வரும் நிலையில், பிரான்ஸ் ஜனாதிபதி உலகளாவிய விஞ்ஞானிகளை ஐரோப்பாவில் பணியாற்ற வருமாறு அழைத்துள்ளார்.

இந்த விடயத்தை அவர் தனது எக்ஸ் தளத்திலேயே பதிவிட்டுள்ளார். அந்த பதிவில் அவர் மேலும் குறிப்பிடுகையில், "பிரான்ஸில், ஆராய்ச்சி முக்கியத்துவம் வாய்ந்தது. புதுமை ஒரு கலாசாரம், அறிவியல் ஒரு எல்லையற்ற வானம். உலகம் முழுவதும் உள்ள ஆராய்ச்சியாளர்களே, பிரான்ஸைத் தேர்ந்தெடுங்கள், ஐரோப்பாவைத் தேர்ந்தெடுங்கள்" என அவர் பதிவிட்டுள்ளார்.

இதனையடுத்து, ‘Choose France for Science’ என்ற புதிய தளத்தை பிரான்ஸ் அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்மூலம் French National Research Agency (ANR) உடன் இணைந்து, உலகின் ஏதேனும் நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களை வரவேற்க விரும்பும் பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவை, அரசிடம் நிதி ஒதுக்கீடு கோர முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியமாக, சுகாதார ஆராய்ச்சி, காலநிலை மாற்றம், பல்வேறு உயிரின பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, விண்வெளி ஆய்வுகள், பசுமை எரிசக்தி, மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் விஞ்ஞானிகள் பெரிதும் வரவேற்கப்படுவர்.

ஐக்ஸ் மார்சேய் பல்கலைக்கழகம் (Aix Marseille University) தனது ‘Safe Place for Science’ திட்டத்தின் மூலம் ஏற்கனவே அமெரிக்காவிலிருந்து வரும் விஞ்ஞானிகளுக்கு பணி வாய்ப்பு வழங்கத் தொடங்கியுள்ளது. பல்வேறு விண்ணப்பங்கள் ஏற்கனவே வந்துள்ளதாக அந்த பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இந்த நடவடிக்கை, அறிவியல் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பிரான்ஸ் அரசின் உறுதியை வெளிப்படுத்துகிறது.

# கொலம்பியாவில் பரவும் மஞ்சள் காய்ச்சல் தொற்று | 34 பேர் உயிரிழப்பு

கொலம்பியாவின் பல பிரதேசங்களில் மஞ்சள் காய்ச்சல் தொற்று பரவி வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஆண்டில் ஆரம்பமான இந்த தொற்றால் இதுவரை 74 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு, கொலம்பியா அரசாங்கம், நாட்டில் அவசர சுகாதார நிலையை அறிவித்துள்ளது.

இதனையடுத்து, மஞ்சள்காய்ச்சலுக்கு எதிரான தடுப்பூசி பெற்றுக்கொள்ளுமாறு அந்நாட்டு அதிகாரிகள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

மேலும், மஞ்சள் காய்ச்சலால் பாதிக்கப்படும் பெரும்பாலானோர் அதன் முதற்கட்டத்திலேயே குணமடைகின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

எனினும் சுமார் 15 சதவீதமானோர் இந்தத் தொற்றால் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டு, 10 முதல் 14 நாள்களுக்குள் உயிரிழக்கின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -20.04.2025




இன்று ஆக்க பூர்வமான நாளாக இருக்கும். திறமை மூலம் நல்ல பலன்களைப் பெறலாம். நீண்ட கால திட்டங்களுக்கு இன்றைய நாளைப் பயன்படுத்தலாம். ஆன்மீக ஈடுபாடு நல்ல பலன் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமையை வெளிப்படுத்தும் நாள். இன்று அபாரமான திறமையை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று அன்பிற்கும் காதலுக்கும் உரிய நாள். உங்கள் நகைச்சுவை மற்றும் காதல் உணர்வு மூலம் உங்கள் பிரியமானவரை மகிழ்விப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் நிதி மற்றும் பயனுள்ள முதலீடு பற்றி இன்று விரைந்து முடிவெடுப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆற்றலும் தன்னம்பிக்கையும் நிறைந்து காணப்படும்.




இன்றைய நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கலாம். உங்கள் நண்பர்களை வெல்வீர்கள். இது பயன்தரத் தக்கதாக இருக்கும். நேர்மறையான மன நிலையோடு இன்றைய தினத்தில் செயல்களை மேற்கொள்வீர்கள்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணியில் உங்களை மேம்படுத்திக்கொள்ள மிகுந்த வாய்ப்புகள் கிடைக்கும். உங்களுக்கு நற்பெயர் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவை பராமரிப்பீர்கள். நேர்மையான அணுகுமுறை மூலம் இது சாத்தியமாகும்.

பணம் அதிக அளவில் காணப்படும். சாதுர்யமாக பணத்தை செலவு செய்ய இன்றைய நாளை பயன்படுத்துவீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். உங்களிடம் மிகுந்த ஆற்றல் காணப்படும்.




நீங்கள் எடுக்கும் முயற்சியில் தடைகளைக் காண்பீர்கள். அதிக சிந்தனையை தவிர்க்க வேண்டும் உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். இன்றைய சூழ்நிலையை சமாளிப்பதை சற்று கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மோதல் நேரலாம். அமைதியாகவும் சூழ்நிலைக்கேற்றவாறும் இருந்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணம் போதுமானதாக காணப்படாது. பணம் இழந்துவிடுவோமோ என்ற பயம் உங்களிடம் காணப்படும்.

முதுகுவலி ஏற்பட வாயுப்புள்ளது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று அமைதியின்றி காணப்படுவீர்கள். வேதனைப்படும் சூழ்நிலைகள் உருவாகும். நண்பர்களின் ஆதரவு குறையும். சற்று கவனமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. இதனால் கவலை ஏற்படும்.

உங்களின் அமைதியற்ற மனநிலை உறவை பாதிக்கும். நல்ல புரிந்துணர்வுக்கு உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று சிறிதளவு பணமே காணப்படும். அதிகமாக செலவு செய்யும் சூழ்நிலை உருவாகும். வீட்டின் புனரமைப்புக்கான செலவாக அது இருக்கலாம்.

இன்று காய்ச்சலுக்கு ஆளாக நேரலாம். ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை.




இன்று பொறுப்புகளை அதிகமாக சுமக்க நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். என்றாலும் உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் இதனை சமாளிப்பீர்கள்.

கடின உழைப்பு காணப்படுகின்றது. என்றாலும் நீங்கள் வெற்றி பெற இயலாது. முறையாக திட்டமிடாததே இதற்கு காரணமாக இருக்கும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். இந்த உணர்வு உங்கள் உறவை பாதிக்கும்.

இன்று பணப்புழக்கம் போதிய அளவு இருக்காது. நிதிநிலையை நன்கு பராமரிக்க வேண்டும். லாபமும் இருக்காது. நஷ்டமும் இருக்காது.

இன்று பதட்டம் காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் அதன் தாக்கம் காணப்படும். எனவே அத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.




இன்று சில சாதகமற்ற பலன்கள் கிடைக்கும். உங்கள் வாழ்வில் சில மாற்றங்களை சந்திப்பீர்கள். பயணங்கள் காணப்படும். தெளிவான மனதுடன் செயல்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணி நிமித்த பயணம் காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சந்திப்பீர்கள். தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். இதனால் உறவில் புரிந்துணர்வை பாதிகாக்க முடியும்.

இன்று பண வரவு குறைவாக காணப்படும். குடும்பத்திற்காக உங்களிடம் உள்ள பணத்தை செலவு செய்வீர்கள்.

தூக்கப் பிரச்சினை காரணமாக இன்று உங்களிடம் பதட்டம் காணப்படும்.




உங்கள் மகிழ்ச்சி மற்றும் சௌகரியங்களை வளர்த்துக் கொள்வீர்கள். என்றாலும் சில தடைகளை நீங்கள் சந்திப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக்கொள்ள இன்றைய நாளைப் பயன்படுத்துங்கள்.

சில தடைகளுக்குப் பிறகு வெற்றி காண்பீர்கள். திட்டமிட்டுச் சிறப்பாகப் பணியாற்றினால் இன்று உங்கள் பணியில் திருப்தி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் வாய்ப்பு உள்ளது. நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்கும். சிறு கடன் வகையில் இன்று பண வரவு காணப்படும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சனை ஏதும் காணப்படாது. என்றாலும் ஆரோக்கியத்தைப் பராமரிக்க நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.




இன்று சிறப்பான நாள். எதிர்பாராத நன்மைகள் ஏற்படும் நாள். உங்கள் சமயோசித புத்தி மூலம் இன்றைய நாளை கழிப்பீர்கள்.

உங்கள் பணியின் தரம் மேலதிகாரிகளால் பாராட்டப் படும். பணிகளை ஆற்றும் போது உங்கள் அணுகுமுறையில் வேகம் காணப்படும்.

இன்று மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். இன்றைய நாளையும் மகிழ்ச்சியாக்குவீர்கள்.

பணபுழக்கம் போதுமானதாக இருக்கும். காப்பீடு மற்றும் பூர்வீக சொத்து மூலம் உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். எனவே ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -20.04.2025




இன்று வெற்றி காண்பதற்கு அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டியது அவசியம். அவசர முடிவுகள் இன்று எந்தப் பயனையும் அளிக்காது.

பணியில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் சரியாக திட்டமிட வேண்டும். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கண்டிப்பும் கறாருமாக இருப்பீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். சகஜமான அணுகுமுறை மூலம் உறவில் நெருக்கம் காணலாம்.

பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி ஏற்பட வாய்ப்புள்ளது




இன்று தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம். இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். இதிலிருந்து பயனுள்ளதை நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலைத் தரும்.

பணிகள் அதிகமாக காணப்படும். இன்று சூழ்நிலை அந்தளவு சாதகமாக இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை ஏற்படும்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வெற்றிகரமாக ஏற்படுத்த அனுசரித்து போகும் அணுகுமுறை தேவை.

ஆன்மீக நோக்கத்துக்கும் பயணத்துக்கும் பணத்தை செலவு செய்வீர்கள். இதில் ஈடுபடுவதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

கண்ணுக்கான சிகிச்சை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பல்வலிக்கான வாய்ப்பும் உள்ளது.




உங்கள் அவசரப் போக்கு காரணமாக இன்று நீங்கள் பல வாய்ப்புகளை இழக்க நேரும். புத்திசாலித்தனமாக இருப்பது நல்லது. விவேகத்துடன் நடந்து கொள்வது நல்லது.

பணியிடத்தில் இன்றைய நாள் சிறப்பாக இருக்காது. உங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். பணியை இழப்பதற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்களிடம் பாதுப்பின்மை உணர்வு காணப்படும். இதை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இந்த உணர்வு இந்நாளின் மகிழ்ச்சியைப் பாதிக்கும்.

உங்கள் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவு காரணமாக பணத்தை இழப்பீர்கள். இன்று நிதி வளர்ச்சி காண்பது கடினமாக இருக்கும்.

பதட்டம் காரணமாக இன்று முதுகுவலி காணப்படும். பிராணாயாமம் செய்வது ஆரோக்கியத்திற்கு நல்லது.




இன்று நீங்கள் எடுக்கும் முயற்சியில் நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்களுக்கு வெற்றி எளிதில் நிச்சயம் கிடைக்கும்.

இன்று பணிகள் சுமுகமாக நடக்கும். பணியில் முன்னேற்றம் காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வளர்த்துக் கொள்வீர்கள். இருவரும் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள இது உதவும்.

பணம் அபரிமிதமாக காணப்படும். ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் பண வரவிற்கு வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது நல்லது.




# உள்ளூராட்சித் தேர்தல் குறித்து இதுவரை 1,712 முறைப்பாடுகள்

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் தினந்தோறும் அதிகரித்து வருகின்றன.

இதுவரை மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி 1,712 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று தெரிவித்துள்ளது.

அதன்படி, வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 9 முறைப்பாடுகளும், தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 1,577 முறைப்பாடுகளும், ஏனைய விடங்கள் தொடர்பில் 126 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது.